திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

கொடுமை! கொடுமை!

எத்தனை காலத்துக்கு இக்கொடுமை

அகவிலையைக் குறைப்பீர் என்றது கழகம்!

அடக்குமுறைதான் பதில் என்கிறது ஆட்சி!

அறிஞர் அண்ணா வேலூர் சிறையில் இன்று 10-வது நாள்!

அவைத்தலைவர் நாவலர் நெடுஞ்செழியன், பொருளாளர் கலைஞர் கருணாநிதி தலைமைக்கழக செயலாளர்களான கே. எ. மதியழகன், சி. பி. சிற்றரசு சத்தியவாணிமுத்து, தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள் டி. கே. சீனிவாசன் ப. உ. சண்முகம், எஸ். முத்து, அப்பில் தருமலிங்கம், உடுமலை நாராயணன், எஸ். எ. ராசமாணிக்கம், S. S. தென்னரசு, மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் மன்னை நாராயணசாமி, இரா. தர்மலிங்கம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள். மேயர் குசேலர். துணைமேயர் வேதாசலம். சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சி, ஊராட்சிமன்ற உறுப்பினர்கள். மாவட்ட வட்ட, கிளைக்கழக நிர்வாகிகள், அலமேலு அப்பாதுரையார் உள்ளிட்ட வீராங்கனைகள். மற்றும் பல்லாயிரக்கணக்கான கழக வீரர்கள் நாடெங்குமுள்ள வெஞ்சிறையில் வாடுகின்றனர்!

இந்த அக்கிரம ஆட்சிமுறைக்கு அளிப்பீர் உங்கள் தீர்ப்பை!

——(0)——

சைதைச் சிறையில் கழகத் தலைவர்கள்

அறப்போராட்டத்தில் ஈடுபட்ட நாவலர் நெடுஞ்செழியன், கே. எ. மதியழகன், சத்தியவாணிமுத்து, மேயர் குசேலர், துணைமேயர் வேதாசலம், முன்னாள் மேயர் வி. முனுசாமி. முனு. ஆதி எம்.எல்.எ. ஆகியோரும் மற்றும் பல கழகத் தோழர்களும் சைதைச் சிறையில் கடந்த பத்து நாட்களாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், தொழிற்சங்கச் செயலாளர் எ. கோவிந்தசாமி, இராசாராம் எம்.பி., மனோகரன் எம்.பி., கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.எ. ஆகியோர் சந்தித்து உரையாடினர்.

ஃ

திருச்சி சிறையில் கலைஞர் கருணாநிதி

அறப்போரில் ஈடுபட்டு, திருச்சி சிறையில்வைக்கப்பட்டுள்ள கழகப் பொருளாளர் கலைஞர் கருணாநிதி எம்.எல்.எ., எ. கே. வேலன், டி. கே. சீனிவாசன், இரா. செழியன் எம்.பி., அப்பில் தர்மலிங்கம் எம்.எல்.எ., எம். எஸ். மணி எம்.எல்.எ., காட்டூர் இராமையா உள்ளிட்ட கழக வீரர்களை, 'தோழர்கள் முல்லை-சக்தி, முரசொலி மாறன் ஆகியோர் சந்தித்தனர்.

ஃ

மதுரைச் சிறையில் பேராசிரியர் அன்பழகன்

அறப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் எம்.எ. எம்.எல்.சி. அவர்கள் மதுரைச் சிறைச்சாலையில் மற்றத் தோழர்களோடு கடந்த பத்து நாட்களாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஃ

காராக்கிரகத்தில் கழகக் கலைஞர்கள்

இலட்சியநடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.எல்.எ., நடிகமணி டி. வி. நாராயணசாமி, வலையாபதி முத்துக்கிருட்டினன் ஆகியோர் அறப்போராட்டத்தில் ஈடுபட்டதின் காரணமாகக் கடந்த பத்து நாட்களாகச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சி. பி. சிற்றரசு உடல்நிலை

சென்னைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ள சி. பி. சிற்றரசு அவர்கள் உடல் நலிவுற்று, வலது கையில் ஏற்பட்டிருக்கும் 'கட்டி' ஒன்றின் வாதையுடன் மெலிந்த நிலையில் காய்ச்சலுக்குள்ளாகியுள்ளார்.

ஃ

பூவிருந்தவல்லி சிறையில் நம் தோழர்கள்

பூவிருந்தவல்லி சிறையில், சென்னை மாவட்ட தி. மு. க. அவைத்தலைவர் காஞ்சி மணிமொழியார், முன்னாள் மேயர் அரசு, முன்னாள் துணைமேயர் செல்வராஜ் டி. கே. கபாலி எம்.சி., கோபால் எம்.சி., சுபாலன் எம்.சி. உள்ளிட்ட பல தோழர்களை அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், டபிள்யூ. பி. பி. சுந்தரம் ஆகியோர் சந்தித்தனர்.

ஃ

மருத்துவ விடுதியில் கழகத் தோழர்கள்

சென்னைச் சிறைச்சாலையில் தடியடிக் கொடுமைக்கு ஆளான, தோழர்கள் இப்ராகீம், சீநிவாசன், இராமசாமி ஆகியோர் கவலைக்கிடமான நிலையில், சென்னை சர்க்கார் பெரிய மருத்துவமனையில் கொண்டுவரப்பட்டுள்ளனர். அவர்களை என். வி. நடராசன், எ. கோவிந்தசாமி, க. இராசாராம், வெ. கிருட்டினமூர்த்தி ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர்.

ஃ

அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன்

திருநெல்வேலி மறியலில் ஈடுபட்டு, சென்னை திரும்பிய கழக அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், அவ்வப்போது வேலூர் சென்று அறிஞர் அண்ணா அவர்களையும், சென்னை, சைதை சிறையில் உள்ள கழகத் தலைவர்களையும், தோழர்களையும் சந்தித்து வருவதுடன், அடக்குமுறைக் கெடுபிடிகளுக்கு ஆளான தோழர்களை ஆங்காங்கே சந்தித்து ஆறுதல் கூறிவருகிறார்.

மலை 15 விலை: 16 காசு. 28 - 7 - 62 சனிக்கிழமை மலர் 48

திராவிடன்

எதையும் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

மாலை 15 | 28—7—62 | மலர் 48

வடிக்கும் இரத்தம் வீண் போகாது!

——(...)——

[என். வி. என். சோமு]

'மாங்குயில் கூவிடும்பூஞ்சோலை—எமை
மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை"

—இந்த இலட்சிய கீதத்தை இசைத்த வண்ணம், ஏறத்தாழ 20,000 கொள்கை வீரர்கள் சிறைச்சாலைக்குள்ளே இருக்கின்றனர்!

விஷம்போல் ஏறியுள்ள விலைவாசியை இறக்கவேண்டும்—கடந்த 15 ஆண்டுகாலமாக நாட்டை ஆண்டு வருகின்ற காங்கிரஸ் ஆட்சி இதற்கு ஆவனசெய்யவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த மூன்று ஆண்டுகளாக—குறிப்பாக தேர்தல் காலத்தில் நாடு நகரெங்கும், பட்டி தொட்டியெங்கும் சொல்லி வந்தது!

நீண்டகாலமாக மக்களை வாட்டிவருகின்ற பிரச்னையான உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்திடவேண்டிய அவசியத்தை கழகத்தின் மேடைகளில் ஒவ்வொரு பேச்சாளரும் கூறியுள்ளனர்.

விலைகளை எப்படியெப்படிக் குறைப்பது என்பதுபோன்ற வழி முறைகளையும் கூறியுள்ளனர்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர், உணவுப் பொருள் விலை குறைப்புக்கான சர்வகட்சிக்குழு ஒன்று சென்னைக் கோட்டையில் முதலமைச்சர் காமராசரைக் கண்டு உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்திடவேண்டிய அவசியத்தை விளக்கியது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆசிரியர் என். வி. என். அவர்கள் அந்த சர்வகட்சிக் குழுவில் கலந்துகொண்டு தி. மு. கழகத்தின் கருத்தினை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அதுமட்டுமின்றி, சென்ற திங்கள் முப்பதாம் நாள் நமது ஒப்பற்ற தலைவராம் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் கழக சட்ட மன்ற உறுப்பினர்களும், முன்னணி வீரர்களும் கோட்டைக்கு முன்னாலே பேரணி ஒன்று திரட்டி மக்களின் குரலை மந்திரிகளின் காதுக்கு எட்டச்செய்தனர்.

அதோடன்றி தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பொருளாதார நிபுணர்கள், அதிகாரிகள், அனைத்துக்கட்சி உறுப்பினர்கள் கொண்ட விலைவாசிக் குறைப்புக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தார்.

இவ்வளவுக்கும் பிறகுதான், ஆட்சியாளர்கள் எதற்கும் செவி சாய்க்காமலிருப்பதைக் கண்டுதான், இத்திங்கள் 19-ந் தேதியன்று ஒருநாள் அடையாள மறியல் நடத்த வேண்டுமென்று கழகம் அறிவித்தது.

அந்த ஒரு நாள் அடையாள மறியலை—பொதுமக்களின் நலனுக்காகக் கழகத்தவர்கள் மேற்கொண்ட அந்த நன்முயற்சியை—நாட்டு மக்களின் உயிரோட்டத்தில் கலந்திருக்கும் மாபெரும் இயக்கமாம் தி. மு. கழகத்தின் அந்த அமைதியான அறப்போரை—நசுக்கிவிட, முறியடிக்க, ஆட்சிபீடத்தினர் திட்டமிட்டு, அவர்கள் நடத்திய அடக்குமுறைக் கொடுமைகளையும், தடியடி தர்பாரையும் மற்றவற்றையும் நாட்டு மக்கள் நன்கறிவார்கள்!

ஏதுமறியாப் பாமரமக்களை மிருகங்களைப்போல் தாக்குதல்!

எண்ணற்ற கழகத் தொண்டர்களைக் கடுமையான முறையில் பழிவாங்குதல்!

தாய்மார்களையும் மிகவும் கொடுமைப்படுத்துதல்!

இம்மட்டோ?

அரசியல் கைதிகளை எப்படி நடத்தவேண்டும் என்ற நாணயத்தை மறந்து, நாகரிகத்தைத் துறந்து, கேவலமாக நடத்துகின்ற கொடுமை! சிறைச்சாலையிலும் தடியடி தர்பார்! அதன் காரணமாக கழகத் தோழர்களின் உயிர் கவலைக்கிடமாகயிருக்கும் கொடுமை.

மக்களின் இதயத்திலே வீற்றிருக்கும் மகத்தான தலைவர்—நலிவுற்ற திராவிடத்தின் நம்பிக்கை நட்சத்திரம் அறிஞர் அண்ணா அவர்களுக்கு இழைத்திடும் கொடுமை!

மற்ற கழகத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இன்னும் கழகத்தில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கின்ற பலரையும் சிறையிலே வாட்டி வதைக்கின்ற கொடுமை! புழுத்துப்போன சோளக்கஞ்சியைக் கொடுத்து கொடுமைப் படுத்துதல்!

—இவ்வளவையும் அஹிம்சாமூர்த்திகள் என்று கூறிக்கொள்வோர்—வெள்ளையனின் ஆட்சிக்காலத்தில் சிறைச்சாலையில் சுக வாழ்வு நடத்திய சுதந்திர புருஷர்கள் நடத்திக்காட்டுகின்றனர்!

கழகத்தவர்களுக்கு இந்த அடக்குமுறை புதியதல்ல!

ஆட்சியிலே இருக்கின்றவர்கள் இழைக்கும் கொடுமைகளைத் தாங்கியவர்கள் நம் கழகத்தவர்கள்!

காங்கிரஸ் காலிகளின் கல்லடிகளுக்கு கத்திக்குத்துகளுக்கு, நயவஞ்சகத்துக்குத் தங்கள் உயிரைக் காணிக்கையாக்கிய கழக வீரர்கள் ஏராளம்! ஏராளம்!

கழகத் தலைவர்களைக் கைகளிலே விலங்கு பூட்டி இழுத்துச் சென்ற கொடுமைகளைக் கூட சகித்துக்கொண்ட கொள்கை வைரங்களைக் கொண்டது நமது கழகம்!

அடக்குமுறைகளைக் கண்டு அடங்கி ஒடுங்கி, அஞ்சி நடுங்கி மூலைக்குச்சென்று முடங்கிவிடும் கட்சியல்ல நம் முன்னேற்றப் பாசறை!

அது மாவீரர்களின் கோட்டம்!

எவ்வளவுக்கெவ்வளவு அடக்குமுறை வீசப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கழகத்தின் கொள்கை வெற்றி பெறும்!

அறுக்க அறுக்க ஒளிவிடுகின்ற வைரத்தை போல்,
அரைக்க அரைக்க மணக்கின்ற சந்தனத்தைப்போல்,
அடிக்க அடிக்க எழுகின்ற பந்தைப்போல்,
அடக்க அடக்க வளருவது நம் கழகம்!
ஆனால்.............!

விலைகளைக் குறைக்க வேண்டும் என்று அமைதியான முறையில் கிளர்ச்சி செய்ததற்காகவா இத்தனை கொடுமைகள்?

இதற்காகவா நள்ளிரவில் வீடு புகுந்து ஏதுமறியாப் பாமரர்களைப் பிடித்துச் செல்வது?

இதற்காகவா கைவண்டிக்காரர்களையும் ரிக்ஷா இழுக்கும் தோழர்களையும் கொடுமைப்படுத்துவது!

அகவிலையைக் குறையுங்கள் என்று கூடிக் குரலெழுப்பினர் என்பதற்காகவா, கழகத் தோழர்களையும், பொதுமக்களையும் தடியால் அடித்து மண்டைகளை உடைப்பது?

இதற்காகவா இந்த நாட்டுச் செல்வங்களைக்—கழகத்தலைவர்களைச் சிறையிலே வைத்து கொடுமைப்படுத்துவது?

சென்னைச் சிறைச்சாலைக்குள்ளிருக்கும் வீரர்களைப் பார்ப்பதற்காக தாய்மார்களும், சகோதரிகளும் ஆயிரக்கணக்கிலே திரண்டு நின்று அண்ணன் என்ன ஆனார், தம்பிக்கு என்ன நேர்ந்தது துணைவர் எப்படி இருக்கிறார் தாயும் தந்தையும் நலமுடன் இருக்கிறார்களா, என்று குமுறும் நெஞ்சோடு நிற்கிறார்களே அவர்களது கண்ணீர் வெள்ளத்தைக் கண்டால் எத்தகைய கல் நெஞ்சனாக இருந்தாலும் அவன் கண்கள் கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கியே தீரும்.

பொதுமக்களே பேசிக்கொள்கிறார்கள். உணவு விலையைக் குறைக்கச் சொன்னதற்கா இப்படி வதைப்பது?

எல்லோருக்கும் நன்மை செய்யத்தானே இவர்கள் மறியல் செய்கிறார்கள், எதற்கு இப்படி கழகத்தாரை கொடுமைப்படுத்த வேண்டும். என்று மக்கள் மன்றம் நமக்குப் பரிந்துரைக்கிறது!

ஆட்சிபீடத்தினர் வேண்டுமானால், தாங்கள் செய்த மூர்க்கத்தனமான அடக்குமுறைகளை மறைத்துக்கொள்ள, கல்லடி, கலவரம் என்று மூடிமறைக்க முயலலாம்!

ஆனால் மக்கள் மன்றம் நடுநிலையாளர்கள். நல்ல உள்ளம் படைத்தவர்கள்—இவர்கள் நம் பக்கம்!

உணவுக் கலகம் இது—மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் காட்டியோ அல்லது மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் காட்டியோ ஏமாற்ற முயலாமல் நல்லதைச் செய்ய முன்வாருங்கள் என்றும்,

ஏறியுள்ள விலைவாசிகளைக் குறைக்கவேண்டியது 15 ஆண்டுகளாக நாட்டை ஆளும் அரசினரின் இன்றியமையாக் கடமையென்றும் கூறியுள்ள நாளிதழ்களின் கருத்துக்களை எண்ணிப் பாருங்கள்!

அடக்குமுறைக் கொடுமைகளுக்குப் பரிந்துபேச முன்வருகின்ற ஆளவந்தார்கள், இன்னும் விலைவாசிக் குறைப்பைப்பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறாமல் இருப்பதே அரசினர் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறார்கள் என்பதற்குச் சரியான சான்றாகும்!

அரசினர் எவ்வளவு கடுமையான அடக்குமுறைகளைப் பரிசாகத் தந்தாலும் நமது குறிக்கோள் தூய்மையானது என்பதில் பெருமிதம் கொள்வோம்!

காங்கிரஸ் ஆட்சியினர் இழைக்கின்ற கொடுமைகளுக்கு அவர்கள் நிச்சயம் பதில் சொல்லவேண்டிய காலம் வந்துதான் தீரும்.

சிறையிலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான கழக வீரர்களே!
நீங்கள் படுகின்ற துயரம் வீண்போகாது!
நீங்கள் அனுபவிக்கின்ற தொல்லைகள் வீண்போகாது!
நீங்கள் சிந்திய இரத்தம் நிச்சயம் விழலுக்கிறைத்த நீராகாது!

மாவீரர்களே! தன்னலங்கருதாத் தியாகிகளே! ஆள்பவர்கள் உங்களை வாட்டி வதைத்தாலும், ஆளப்படுபவர்கள் வாழ்த்துகிறார்கள்!

நமது குறிக்கோள் நியாயமானது—பொதுவானது!
அது நிச்சயம் வெல்லும்!

வாழ்க அண்ணா! வெல்க திராவிடம்!

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம். ஜூலை மாதம் முடிய உள்ள பட்டியல் விவரம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான தொகை முழுவதும் உடன் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

— நிர்வாகி: திராவிடன்

வெறும் கூப்பாடல்ல வேதனைக் குரல்!

திருச்சி (வாத்தலை)யில் கூடிய தி. மு கழக பொதுக்குழு முடிவின்படி விலைவாசி உயர்வைக் கண்டித்து—ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள அமைச்சர்களுக்கு அதை உணர்த்த, சென்னையில் சட்டமன்றத்தின் முன் (கோட்டை முன்) பேரணி திரட்டியும், சென்னை மாவட்ட தி. மு. கழக நான்காவது மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கேற்ப ஏப்ரல் 19ந்தேதியன்று நாடெங்குமுள்ள மாவட்ட கலெக்டர்—சப் கலெக்டர்—தாசில்தார் அலுவலகங்களின்முன் மறியல் நடத்தியும் பெருங்குரல் எழுப்பி ஏறியுள்ள விலைவாசியை மட்டுப்படுத்தி குறைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொண்டோம். மேலும் நாடெங்கும்—நாட்டு மக்களில் பெரும் பகுதியினர் விலைவாசியேற்றத்தால் அல்லல்பட்டு வாழ்க்கை பெரும்பாரமாகி அவதிக்கு ஆளான மக்களின் உள்ளத்து எண்ணங்களை—இல்லத்து அல்லல்களை நாடாளும் அமைச்சர்களுக்கு உணர்த்த ஊர்வலங்கள்-கூட்டங்கள் நடத்தி கேளாக் காதினரை கேட்கும்படி செய்யத் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியுள்ளனர்.

ஏழை — எளிய — பாட்டாளி—தொழிலாளி—நடுத்தர மக்களின் அல்லலுற்ற வாழ்க்கைக்கு அகவிலை ஏற்றமே காரணமெனக் கண்டறிந்து, ஏறியுள்ள அகவிலையை தடுக்க—குறைக்க தி. மு. கழகம் மேற்கொண்ட பணியை கேலி செய்பவரும்—கிண்டல் மொழி பகர்பவரும் புதிய பொருளாதாரப் போதனை செய்பவர்களும் உண்டு! மக்களின் அல்லல் கண்டு அகற்றுவதற்குரிய திட்டத்தை—செயலை மேற்கொள்ள வேண்டிய அமைச்சர்களே அவ்விதம் பேசியதில் முதலிடம் பெற்றவர்கள்.

அரசு ஊழியர் மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய அமைச்சர் பக்தவத்சலம், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது என்று கூப்பாடு போடுவது இப்போது நாகரீகமாகி விட்டது. என்று கேலி பேசி இருக்கிறார்.

விலைவாசி உயர்வு மக்களை மட்டுமல்ல, அரசாங்கத்தையும் பாதிக்கிறது என்பதை உணர்ந்தாவது விலைவாசி குறைய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டாமா? விலைவாசி அப்படி ஒன்றும் உயர்ந்து விடவில்லை என்று கூறும் அமைச்சர்களுக்கு திட்டக் குழுவினர் வெளியிட்ட அறிக்கை தெளிவை உண்டாக்குமென்று நினைக்கிறோம்.

"இரண்டாவது திட்டக் காலத் துவக்கத்தில் பல்வேறு திட்டங்களைக் குறித்து எவ்வளவு செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டதோ அந்த மதிப்பீட்டைவிட திட்ட இறுதியில் அதிகமாயிற்று. உதாரணமாக பொதுத் துறையின் மூன்று இரும்பு உருக்காலை குறித்து ஆரம்பக் கட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை, சுரங்கம்—நகர் அமைப்பு நிலக்கரி ஆகியவற்றையெல்லாம் சேர்த்து ரு 425 கோடியாகும். ஆனால் திட்டம் தவக்கப்பட்ட 2 ஆண்டுகளுக்குப் பின்னர் மதிப்பீட்டுச் செலவு ரு 560 கோடியாக உயர்ந்தது. அண்மையில் அதன் மதிப்பீட்டுச் செலவு ரு 620 கோடியாகும். இது ஆரம்பக் கட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகையைவிட 50 சதவிகிதம் கூடுதலானதாகும்." இவ்விதம் சென்ற ஆண்டு ஜூலை 25-ம் நாள் திட்டக் குழுவினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதிலிருந்து தெரிவதென்ன? திட்டங்கள் நிறைவேற்றத் தேவையான சிமெண்ட்—நிலக்கரி—செங்கல் இரும்பு போன்ற பொருள்கள் 50 சதவிகிதம் விலைகள் உயர்ந்திருக்கின்றன. எனவே திட்டச் செலவு கூடுதலாகிறது. இதையாவது அரசைப் பாதிக்கக்கூடிய இந்தப் பொருள்களின் விலைகளையாவது, திறமையோடு ஆள்பவர்கள் நாங்கள்தான் என்று பெருமையடித்துக் கொள்ளும் இந்தக் காங்கிரஸ் ஆட்சியாளர்களால்-அமைச்சர்களால் குறைக்க முடிந்ததா? அல்லது குறைப்பதற்குரிய நடவடிக்கையாவது எடுத்தனரா? உடனடியாக இவைகளில் கவனம்

ஆணவத்தை விடுப்பீர் அகவிலையைக் குறைப்பீர்!

செலுத்துவதை விட்டு விட்டு, மக்கள் விலைவாசியைக் குறைக்க கோரிக்கை எழுப்பினால் அதை "கூப்பாடு" என்று கேலி பேசுகிறார் அமைச்சர்! மக்களின் கோரிக்கை கூப்பாடு என்றால், திட்டக்குழுவின் அறிக்கையில் விலைவாசி 50 சதவிகிதம் உயர்ந்திருக்கிறதென்று கூறுகின்றனரே அதற்குப் பெயரென்ன?

"அகவிலைகள் இடைவிடாமல் ஏறிக்கொண்டு போவதுதான் நமது பொருளாதாரத் துறையில் வருந்தத்தக்க ஒரு அம்சமாகும்" என்று 1960 ஆகஸ்டில் சட்டமன்றத்தில் தமிழககவர்னர் உரைநிகழ்த்தி இருக்கிறாரே, இதை அமைச்சர் என்னவென்று சொல்லுகிறார்? இதுவும் கூப்பாடுதானா?

"விலைவாசிகள் மிகுந்திருக்கின்றன; குறிப்பாகத் துணி வகைகளின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. இதனால் கீழ் வகுப்பினரும்—நடுத்தர வகுப்பினருமான மக்கள் கூடுமானவரை மன நிறைவு கொண்ட வாழ்க்கை வாழ்வது என்பது முற்றிலும் இயலாததாகி விட்டது. "இவ்விதம் மாநிலங்கள் அவையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது கேரளத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் திருமதி தேவகி கோபிதாஸ் பேசி இருக்கிறாரே, அமைச்சரின் மொழிப்படி இதுவும் அதுதானா?

எனவே பிரச்சினைகளை அலட்சியப் படுத்திப் பேசி விடுவதாலே தங்களை ஆற்றல் மிக்கவர்கள் என்று அமைச்சர்கள் எண்ணிக் கொள்கிறார்கள். ஆற்றல் மிக்க அமைச்சர்கள் என்பதற்கு பொருள் என்ன? விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு முயன்றும் முடியவில்லை" என்று கூட அல்ல—முயலவே செய்யாத அமைச்சர்கள் எப்படி ஆற்றல் படைத்தவர்களாக தங்களை எண்ணிக்கொள்ள முடியும்?

எனவே எதையுமே சாதித்துக் காட்ட இயலாத—மக்களின் கோரிக்கைகளை எல்லாம் அலட்சியப் படுத்துகிற ஆட்சிபீடமேறிகளை—அமைச்சர்களை ஆற்றல் மிக்கவர்கள் என்பதற்குப் பதிலாக ஆணவக்காரர்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்குமல்லவா?

உங்களின் கவனத்திற்கு ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஆற்றல் மிக்கவரின் செயலை எடுத்துக் காட்டுகிறோம். அதன் பின் நம்மை ஆள்பவர்கள் ஆற்றல் மிக்கவர்களா என்பதை நீங்கள் முடிவு செய்யுங்கள்!

விலைவாசி உயர்வால் நமது பொருளாதார முன்னேற்றம் தடைபடுவதைப்போல—வளர்ச்சி குன்றுவதைப்போல—திட்டத்தின் முதலீடுகள் மதிப்பீட்டைவிட உயர்வதைப் போல அமெரிக்க நாட்டில் உருக்கு நிறுவனங்கள் எல்லாம் உருக்கு விலையை டன் ஒன்றுக்கு 6 டாலர் திடீரென உயர்த்தியதால் அமெரிக்க பாதுகாப்புத் துறைக்கு 1000 மில்லியன் டாலர் அதிகச் செலவு ஏற்படும் நிலையும் வெளிநாட்டு வாணிபத்தில் அமெரிக்கப் பொருள்கள் விற்பனையில் பாதிக்கும் நிலையும்—சிறு தொழில்களும்—குடும்பத் தொழில்களும் பெருமளவு பாதிக்கும் நிலையும் ஏற்பட்டது. இந்த விலைவாசி உயர்வுக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி 11-4-62ல் கண்டனத்தைத் தெரிவித்தார். அத்துடன் அவர் தனது கடமை முடிந்துவிட்டதென்று நின்றுவிடவில்லை. இங்குள்ள சில அமைச்சர்களைப் போல் விலைவாசி உயர்ந்து இருக்கிறது. ஆனாலும் அதைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்று கூறி தங்களது தகுதிக் குறைவை—கையலாகாத் தனத்தை—ஆற்றல் இன்மையைக் காட்டிக் கொள்வதுபோல கென்னடியும் இருந்துவிடவில்லை; உடனே நடவடிக்கையை மேற்கொண்டார். உருக்குவிலையை உயர்த்திய நிறுவனத்தார்கள் அனைவரையும் விசாரணை மன்றத்திலே ஏற்றினர். உருக்கு விலையை உயர்த்தியது பற்றித் தங்கள் தரப்புக் கருத்துக்களை சமஷ்டித் தலைமை விசாரணை மன்றத்தின் முன் தெரிவிக்க வேண்டுமென்று எல்லா எஃகு நிறுவனத்தார்களுக்கும் 13-4-62ல் ஆணை பிறப்பித்தார்.

விசாரணைக் கூண்டிலே ஏற்ற ஆணைகள் பிறப்பித்தவுடன் எல்லா நிறுவனங்களும் உருக்கின் மீது ஏற்றி இருந்த விலையைக் குறைத்துக் கொண்டன 15—4—62ல் விலைகள் குறைக்கப்பட்டு விட்டது.

உருக்கின் விலை ஏற்றத்தைப் பற்றி ஏப்ரல் 11-ம் நாள் கண்டனம் தெரிவித்தார். 13-ம் நாள் நடவடிக்கை மேற்கொண்டார். 15-ம் நாள் விலைகள் குறைக்கப்பட்டு விட்டது. நான்கே நாளில் விலையேற்றத்தைக் குறைத்துக் காட்டினார் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி. இதுதான் சாதனை—ஆற்றல் உள்ளவர் என்பதற்கு பொருளும் இதுதான்!

இப்போது இங்குள்ள அமைச்சர்களின் பேச்சையும்—போக்கினையும் எண்ணிப்பார்த்தால் இவர்களை ஆற்றல் உள்ளவர்கள் என்று சொல்ல முடியும்? பொறுப்பற்றவர்கள் — திறமை இல்லாதவர்கள் என்ற முடிவுக்கே வரமுடியும். இங்குள்ள அமைச்சர்கள் பொறுப்பை உணர்ந்தவர்கள் என்றால் — ஆற்றல் படைத்தவர்கள் என்றால் விஷம்போல ஏறியுள்ள விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுத்து ஓரளவாவது குறைத்துக்காட்டி இருக்கலாமே!

கென்னடியால் செய்ய முடிந்ததை இவர்களால் ஏன் செய்ய முடியவில்லை?

இறக்குமதியில் 50 சதவிகிதம் வெட்டு காரணமாக பம்பாயில் உள்ள வியாபாரிகள் பொருட்களின் விலையை உயர்த்தி இருக்கிறார்கள். இதுகுறித்து மத்திய தொழில் அமைச்சர் திரு. கே. சி. ரெட்டி "இறக்குமதி அளவில் வெட்டு காரணமாக வைத்து, இறக்குமதிப் பொருட்களின் விலைகளை உயர்த்த முயலவேண்டாம்" என்று வியாபாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனாலும், இறக்குமதிப் பொருள்களின் விலை உயர்ந்தே இருக்கிறது—சாதாரணம் போன்றவர்களுக்கு சில பொருள்கள் எவ்வளவு விலை கொடுத்தாலும் கிடைப்பதுகூட இல்லை. நிலைமை இவ்வளவு மோசமான பிறகும், அமெரிக்காவிலே எஃகு நிறுவனத்தார்களை விசாரணைக் கூண்டிலே ஏற்ற கென்னடி ஆணை பிறப்பித்ததுபோல், இங்கு இறக்குமதிப் பொருள் வியாபாரிகளை விசாரணைக் கூண்டிலேற்ற அமைச்சர் ஏன் ஆணை பிறப்பிக்கக் கூடாது? இதிலே ஏன் தயக்கம்?

தூத்துக்குடி தி. பொன்னுசாமி

(4-ம் பக்கம் பார்க்க)

3-ம் பக்கத் தொடர்ச்சி......

அல்லது வேறு எதாவது நடவடிக்கையை அமைச்சர் மேற்கொண்டாரா என்றால் இல்லவே இல்லை! இந்த நிலையில் இவர்கள் எப்படி தங்களுக்குத்தான் நாடாளும் ஆற்றல்... அறிவு அத்தனையும் உண்டு என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

இவர்களின் திறமைக்கு இதோ ஒரு சான்று! மத்திய அரசு நிலக்கரியின் விலையை உயர்த்துவது பற்றி ஆராய்ந்து வருவதாக செய்தி தரப்பட்டிருக்கிறது. வளர்ந்துவரும் தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் எவ்வளவு முக்கியமோ, அதைப் போல நிலக்கரியும் முக்கியம் பெற்றது; நிலக்கரியின் விலை உயர்ந்தால் அதைப்பயன்படுத்தி தொழிற்சாலைகளில் செய்யப்படும் கருவிகள்—இயந்திரங்களின் விலையும் உயரும்; அதனால் அந்தக் கருவிகளைக்கொண்டு உற்பத்தி செய்யும் பண்டங்கள்—பொருள்களின் விலையிலும் உயர்வு ஏற்படலாம். எனவே நிலக்கரியின் விலைஉயர்வு விலைவாசி உயர்வுக்கு அடிப்படையாக அமைந்துவிடும்; விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்ற மக்களின் கோரிக்கையை நிறைவேற்றவேண்டிய அரசு, விலைவாசியை உயர்த்தும் முறையில் செயல்பட்டு வருவது விந்தையாக இருக்கிறது.

இந்த ஆட்சியைப்பற்றி இரண்டு விதத்திலே சந்தேகிக்க வேண்டியதிருக்கிறது. ஒன்று இவர்கள் விலைவாசி குறைய வேண்டுமென்று உண்மையாகவே எண்ணுகிறார்களா? அல்லது மக்களை ஏமாற்றும் நோக்கத்தோடு நேரத்திற்குத் தக்கபடி விலைவாசி குறைய வேண்டுமென்று சொல்லுகிறார்களா? இரண்டாவது, உண்மையிலேயே இவர்கள் விலைவாசி குறைய வேண்டுமென்று எண்ணி, ஆனால் விலைவாசி குறைப்பதற்கு வழிவகை தெரியாமலேதான் விலை உயர்வை வளரவிட்டனரா? மக்கள் மத்தியில் எழுந்துள்ள இந்த இரண்டு சந்தேகங்களுக்கும், தனது தெளிவான நிலையை திட்டவட்டமாகச் சொல்லியாக வேண்டிய பொறுப்பும்—கடமையும் அமைச்சர்களைச் சேர்ந்ததாகும்.

மேலே எழுந்துள்ள சந்தேகத்திற்கு விளக்கமளிக்கும் விதமாக—தெளிவுபடுத்தும் விதமாக உள்ளத்தைத் திறந்து ஒரு அமைச்சர் பேசி இருக்கிறார். இதோ அது :—

"பொருள்களின் விலைகள் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு அதிகம் உயரவில்லை. இந்த விலையை இப்படியே பாதுகாக்க நான் எவ்வளவு காலம் அமைச்சராக இருக்கிறேனோ அதுவரை பாடுபடுவேன்" இவ்விதம் பேசியவர் சாதாரண அமைச்சரல்ல, இந்திய உபகண்டத்தின் உணவுத்துறை அமைச்சராகப் பணியாற்றும் எஸ். கே. பட்டீல்.

விலைவாசி குறைய வேண்டுமென்று கவர்னர் சொல்லுகிறார்—காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டமன்றத்திலும் — பாராளுமன்றத்திலும் பேசுகிறார்கள்; இவை எல்லாவற்றிற்கும் மேலாக மக்களே கோரிக்கை எழுப்பிவருகிறார்கள்; ஆனால் உணவு அமைச்சர் விலைவாசி குறைந்திடாதபடி பாதுகாப்பேன் என்று பேசுகிறார்; எங்கு பேசி இருக்கிறார் தெரியுமா? பஞ்சாப்-டில்லி வணிகர்களின் 57வது ஆண்டு விழாக் கூட்டத்தில் இவ்விதம் பேசி வணிகக் கோமான்களை தட்டிக்கொடுக்கிறார். அங்கு

(5-ம் பக்கம் பார்க்க)

காட்டுத்தனமான தாக்குதல்-மூர்க்கத்தனமான தடியடி

காந்தீயம் காட்டும் வழி இதுவா

அதிகாரிகளைப் பாராட்டிக்கொள்ளும் அமைச்சர்

அகவிலை குறைப்புக்கு வழி சொல்லவில்லையே!

அடக்குமுறையின் பின்னணி திருச்செங்கோடு தேர்தலா?

கழகத்தின் கண்டன அறிக்கை

கடந்த 19-ம் நாள் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து, அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் தன்மையையும், அவரது போக்கையும் கண்டித்து கழக அமைப்புச்செயலாளர் என். வி நடராசன் அவர்களும், மற்றும் கழகப் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு அறிக்கையொன்றினை வெளியிட்டிருக்கிறார்கள்.

அவ்வறிக்கையில் கையெழுத்திட்டுள்ளவர்கள் :—

என். வி. நடராசன், இ. மனோகரன் எம்.ஏ.,எம்.பி. (பாராளுமன்ற தி. மு. க. கட்சித் தலைவர்), க. இராசாராம் பி.ஏ., எம்.பி., டி. டி. இராமபத்திரன் எம்.பி., அரூர் முத்து எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. (சட்டமன்ற தி. மு. க. துணைச்செயலாளர்) மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களான எஸ். ஜே இராமசாமி, புலவர் கோவிந்தன், கே. திருப்பதி, சின்னராசு, அப்துல்கலீல், முனிரத்தினம், எஸ். முத்துலிங்கம், செ. கோ. விசுவநாதன், எம். சண்முகம், இராசாங்கம், எம். ஆர் கிருஷ்ணமூர்த்தி, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.பி.எல்., சின்னசாமி, ஆ. துரையரசன், கமலநாதன், இரா. நாராயணன், பி. வி. சீராமுலு, எம். வி. கரிவேங்கடம் பி.ஏ.பி.எல்., என். செங்கோட்டுவேல், சி. வி. வேலப்பன், சி. மாணிக்கம், ஆர். நல்லமுத்து, வி. ஆர். பெரியண்ணன், எஸ். ஆறுமுகம், து. ப. அழகமுத்து, செகதாம்பாள்-வேலாயுதம், எஸ். மணி, முருகையன், திராகராசன், சா. இராமசாமி, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களான கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், வெங்கடாசலம்.

அறிக்கையில் கூறியுள்ளதாவது :—

"மறியல்பற்றி சட்டமன்றத்தில் அமைச்சர் பக்தவத்சலம் வெளியிட்ட அறிக்கையில், தமது முன்னுள் பதவிக்குரிய பாணியையும் 'பாஷை'யையும் காட்டிக்கொண்டிருக்கிறார்.

விளக்கம் அளிப்பதற்குப் பதிலாக அமைச்சர் பக்தவத்சலம், அதிகாரிகளின் கைவசம் உள்ள வார்த்தைக் குவியலைக்கொண்டு, உண்மையான பிரச்சினையை மூடி மறைத்திருக்கிறார்.

"நிலைமை முழுவதும் கட்டுக்கு அடங்கிவிட்டிருக்கிறது; ஆனால் உடனடியாகவும் திடசித்தத்துடனும் எப்போதும்போலப் போலீசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுர்; சமூக விரோதக் கும்பலை அடக்கி ஒடுக்கும்; பாதுகாப்பும் அமைதியும் நிலைநாட்டப்படும்"

என்று அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

ஆனால் இது எடுத்து விளக்கப் படவேண்டிய விஷயமா?—நிச்சயமாக இல்லை; ஏனெனில், சர்க்காருக்கு எதிராக எந்தச் சக்தியும் அமைக்கப்பட்டு, சர்க்காருடைய பலத்தை அறைகூவி அழைத்திடவில்லை; சட்டத்தின் புனிதத் தன்மையை எதிர்த்திடவில்லை; எனவே போர்வீரர் பரணி பாடுவது போன்ற முறையிலே அமைந்துள்ள ஒரு அறிக்கையை, அமைச்சர் வெளியிட்டிருப்பது விசித்திரமானதாக இருக்கிறது.

சமூக விரோதக்கூட்டம் நிச்சயம் அடக்கி ஒடுக்கப்படவேண்டும்; போலீசு துரிதமாகவும், திடமனதுடனும் செயலாற்றவேண்டும்—அதுதான் சட்டம், அமைதி ஆகியவற்றைக் காத்திடும் முறை. ஒருவரும் இதனை மறுத்திடவில்லை.

'சமூக விரோதக் கும்பலை ஒடுக்குகிறோம்' என்று சாக்குக் காட்டிக்கொண்டு, ஆளும்கட்சிக்கு எதிராக உள்ள அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் மீது தாக்குதலை நடத்தக் கூடும்! கடமையாற்றுகையில் அளவுக்கு மீறிய செயலில் ஈடுபடக்கூடும்; எரிச்சலூட்டித் தூண்டிவிடக்கூடும். போலீசு விசிலடிக்கும் காரியத்தைச் செய்யாமல், அமைச்சர் இந்த அம்சங்கள் பலவற்றையும் விளக்கியிருக்க வேண்டும்-என, ஒருவருக்கு எதிர்பார்க்கும் உரிமை இருக்கிறது.

குறிப்பாக சென்னையிலும், வேலூரிலும் 19-ந் தேதியன்று தமது கடமையைச்செய்யும்போது போலீசார் பயன்படுத்திய தாக்குதலின் அளவு மூர்க்கத்தனமாக இருந்தது; தடியடி முரட்டுத்தனமாக இருந்தது! இதைத் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களின் மூலம் நிரூபிக்க நூற்றுக்கணக்கானவர்கள் தயாராக இருக்கிறார்கள்!

இதனால், பொதுமக்களில் ஒரு பகுதியினர் வரம்பு மீறிய செயல்களில் ஈடுபட்டதைக் கண்டிக்காமல் இருப்பதாகப் பொருள் கொள்ளக்கூடாது. வன்முறையில் ஈடுபடுவோர்கள் இருக்கலாம்; பலாத்காரச் செயலைத் தூண்டிவிட்டுத் தூபமிடுவோர் இருக்கலாம்; எப்போதும் சட்டத்துக்கு உட்பட்டு நடக்கும் மக்கள் ஆத்திர உணர்ச்சிக்கு ஆட்பட்டு, வெறிச்செயலில் ஈடுபட்டிருக்கலாம்; மதிப்புவாய்ந்த சென்னைக் குடிமகன் ஒருவர் தாக்கப்பட்டார் என்பதும், ஓடிக்கொண்டிருக்கும் வண்டிகள் தாக்கப்பட்டன என்பதும் மனவேதனை மூட்டத்தக்க செயல்களாகும். இவைகளெல்லாம் வரம்பு மீறிய செய்கைகள்—கண்டிக்கத்தக்கவை—பொறுப்புள்ள எந்தக் கட்சியும் இத்தகைய செயல்களை வரவேற்காது. சட்டம் தன் பணியினைச் செய்ய உரிமை இருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில், பெரும்பாலும் இப்படிப்பட்ட கொந்தளிப்புகள், எரிச்சலூட்டித் தூண்டி விடுவதாலேயே கிளம்புகின்றன என்பதையும் மறந்துவிடக் கூடாது.

வேலூர், சென்னை ஆகிய இரண்டு இடங்களில் தவிர எங்கும் எவ்விதமான வரம்பு மீறிய நிகழ்ச்சியும் ஏற்பட்டுவிடவில்லை.

சென்னையிலும், வேலூரிலும் மறியல் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள் இது, எரிச்சலூட்டித் தூண்டிவிடும் செயலாகும்; அவர்களைக் கைது செய்ய வேறு முறைகளே இல்லையா?

இந்தத் தலைவர்களிடம் இலட்சக்கணக்கான மக்கள் மதிப்பும் பாசமும் கொண்டுள்ளனர். அவர்கள், பொதுப் பிரச்சினைக்காகத் தொண்டாற்றும் வேளையில் மக்கள் தமக்குள்ள பற்றுபாசத்தைக் கொட்டிக் காட்டப்படுவது இயற்கை. பெருந்திரளான மக்கள் முன்னாலே வைத்து அந்தத் தலைவர்களைக் கைது செய்வது முட்டாள்தனமானது மட்டுமல்ல—யூகமற்றது மட்டுமல்ல — திட்டமிட்டு எரிச்சலூட்டித் தூண்டிவிடும் செயலுமாகும்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, அங்கு கூடியிருந்த பெருந்திரளான மக்கள் மனதில் பொங்கி எழக்கூடிய வெறுப்பு உணர்ச்சி எப்படி இருக்கும் என்பது தெரியும்; ஆனால் அதுபற்றி அவர்கள் கவலைகொள்ளவில்லை. உறுதியான நடவடிக்கை எடுப்பதிலே தங்களுக்குள்ள ஆற்றலை வெளிக்காட்ட (அதிகாரிகள்) விரும்பினார்கள் போலும்!

குற்றமற்ற மக்களின் பேரில் நடத்திய தாக்குதல் சக்தியிலே நூற்றிலே ஒரு பங்கு ஆற்றலை, காலிகள், சமூக விரோதிகள் ஆகியோரை ஒடுக்குவதற்குக் காட்டியிருந்திருப்பார்களேயானால், சமூகம் எவ்வளவோ சீர்பட்டுப் போயிருக்கும். அந்த முனையிலே ஆற்றலைக் காட்ட முடியாமல் மறியலை விலைவாசிக் குறைப்பு எனும் மேலான நோக்கத்துக்காக நடத்தப்பட்ட மறியலைக் காணக்கூடிய மக்களின் பேரில் தமது முழு தாக்கும் சக்தியையும் காட்டியிருக்கிறார்கள்,

ஆளுங்கட்சி பொறுப்புள்ள முறையில் நடந்து கொண்டிருந்தால்—மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் போக்கிலே நடந்து கொண்டிருந்தால், இந்த மறியலே தேவைப்பட்டிருக்காது.

எதிர்க்கட்சித் தலைவர் விலையேற்றப் பிரச்சினையைக் கவனிக்க எல்லாக் கட்சியினரும் கொண்ட ஒரு குழு அமைக்கச் சொல்லிக் கேட்டபோது, அதற்கு இணங்க வேண்டும் என்ற அரசியல் நுண்ணறிவோ, மரியாதை காட்டும் முறையோ அமைச்சர் மேற்கொள்ளவில்லை; எண்ணிக்கை பலத்தையே அப்போது மனத்திலே கொண்டிருந்தார்.

இப்போது, 'தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள் பொறுப்பற்ற முறையிலே நடந்துகொண்டனர்' என்று கூற முற்படுவது அறிவீனமான போக்காகும்.

யூகத்துடன் அவர் நடந்து கொண்டிருப்பாரானால், இந்த நிகழ்ச்சிகளே ஏற்பட்டிருக்காது.

எரிச்சலூட்டித் தூண்டி இருந்திராவிட்டால், இந்த நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை நேரிட்டிருக்க முடியாது. முதலிலிருந்து முழு அளவுக்கும் தவறுகளைச் செய்துவிட்டு இப்போது மக்கள் இன்னின்ன வன்முறைச் செயல்களைச் செய்தனர் என்று அமைச்சர் பட்டியல் கொடுக்கிறார்.

இந்தச் சம்பவம் முழுவதையும் விசாரிக்க பாரபட்சமற்ற ஒரு நீதி விசாரணை நடத்தும்படி நாங்கள் கேட்கிறோம் — அமைச்சர் ஒப்பமாட்டார்; அவருக்கு, அதற்கான துணிவு கிடையாது. திருச்செங்கோடு துணைத் தேர்தல் நடத்த இருக்கும் இப்போது தி. மு. கழகத்தின் முன்னணியினர் பலரை கூண்டுக்குள்ளே போட்டு அடைத்து விட்டோம்—என்ற ஒரு திருப்தி அவருக்கு இருக்கக்கூடும்.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமென்ற உறுதிமொழியை பொதுமக்களுக்குத் தருகின்ற முறையில் ஒரு வார்த்தை கூட அவர் தமது அறிக்கையில் சேர்க்காததிலிருந்தே அவர் எவ்வளவு பொறுப்பாக நடந்து கொள்கிறார் என்பது விளங்குகிறது.

தி. மு. கழகம், கடமையைச் செய்ததில் மகிழ்ச்சி கொள்கிறது. விளைவுகள் எவ்வளவு கடினமானவையாக இருப்பினும்—அமைச்சரின் அறிக்கையைப் பார்த்தால் கடினமாகத்தான் இருக்கும் என்று தெரிகிறது — அவற்றைத் தி. மு. கழகம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது."

4-ம் பக்கத் தொடர்ச்சி..................

குழுமி இருந்த பதுக்கல் வியாபாரியையும்—கடத்தல் வியாபாரியையும்—கள்ள மார்கட் வியாபாரியையும் உங்களை ஒன்றும் செய்யமாட்டோம்; தாராளமாக விலையை உயர்த்துங்கள் அப்படி உயருகிற விலை குறைந்திடாதபடி பாதுகாக்க நான் இருக்கிறேன் என்பதுபோல அபயமளித்துப் பேசி இருக்கிறார்.

இப்படிப்பட்டவர்கள் அமைச்சர்களாக இருக்கும் வரை மக்களின் கோரிக்கை மதிக்கப்படுமா? இவர்களால்—இந்த காங்கிரஸ் ஆட்சியாளர்களால் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படுமென்று கனவிலும் கருத முடியுமா? எனவே இவர்களுக்கு மக்களைப் பற்றிய அக்கறை கிடையாது!

விலைவாசி குறைய வேண்டுமென்ற மக்களின் கோரிக்கையை, ஆட்சியாளர்கள் உண்மையிலேயே மதிக்கிறார்கள் என்றால், கண் துடைப்புக்காக விலைவாசி உயர்வு பற்றி ஆராய குழு நியமித்திருக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. எதுஎதற்கெல்லாமோ வெளிநாடுகளுக்கு பயிற்சி பெற்றுவர நிபுணர்களையும்—குழுக்களையும் அனுப்புகிறார்கள்; இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்குக்கூட, இரஷ்யாவிற்கு குழு ஒன்றை அனுப்பி அங்கு ஆட்சிமொழி செயல்படுத்திய விதம் பற்றி அறிந்துவந்து இங்கும் அதுபோல செயல் படுத்தினார்கள். அதும்மொழி இந்திக்குக் காட்டுகிற அக்கறையில் கொஞ்சமாவது, மக்களின் கோரிக்கையான விலைவாசி குறைப்பில் அக்கறை கொண்டனரா? உலகப் போருக்குப்பின் எல்லா நாடுகளிலும் விலைவாசி சிறிதளவு உயர்ந்தே இருக்கிறது. ஆனால் செக்கோஸ்லோவாகியாவில் போருக்குப் பின் 1953-ம் ஆண்டிலிருந்து விலைவாசி குறைந்திருக்கிறது. எனவே விலைவாசியை எவ்விதம் கட்டுப்படுத்தி குறைப்பது—என்ன நடவடிக்கை மேற்கொள்ளுவது என்பது பற்றி எல்லாம் ஆராய செக்கோஸ்லோவாகியா நாட்டிற்கு குழு ஒன்றை அனுப்பி ஆராய்ந்து, அதற்குரிய முறையில் ஆட்சியாளர்கள் செயல்படவேண்டும்.

செக்கோஸ்லோவாகியா நாட்டில் 1953-ம் ஆண்டிலிருந்து விலைவாசி ஆண்டுக்கு ஆண்டு குறைந்துவந்திருக்கிறது. அங்கு 1953-ல் இருந்த விலைவாசியை விட 1958-ல் 20 சதவிகிதம் குறைந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்குத் தக்கபடி விலைவாசியும் உயரும் என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள்; அது ஓரளவு உண்மைதான் என்றாலும், இங்குபோல் வருமான உயர்வு 20 சதவிகிதமும், விலைவாசி உயர்வு 50 சதவிகிதமும் ஏற்படும் நிலை மிகவும் ஆபத்தானது என்பதை அமைச்சர்களுக்கு கூறிக்கொள்ளுகிறோம். ஆனால் செக்கோஸ்லோவாகியாவில் வருமானமும் உயர்ந்திருக்கிறது—அதே நேரத்தில் விலைவாசியும் குறைந்திருக்கிறது; பொருளாதார வளர்ச்சியின் காரணமாக விலைவாசி உயர்வது என்ற நிலை அங்கு இல்லை. இந்த நிலை அங்கு எப்படி ஏற்பட்டதென்றால், நாட்டின் வளத்தை—வருமானத்தை கொள்ளையடிக்கும் முதலாளித்துவக் கூட்டம் எதுவும் அங்கு இல்லை. இந்த நிலைமைகளை ஆய்ந்தறிந்து, அரசு அதற்கேற்ற முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால் நிச்சயம் விலைவாசியை

(6-ம் பக்கம் பார்க்க)

5-ம் பக்கத் தொடர்ச்சி.....................

அமெரிக்கா - செக் நாட்டைப் பாரீர்! அதனைப் பின்பற்றுவீர்!

மனம் உண்டென்ருல் மார்க்கமும் உண்டு

குறைக்கமுடியும். அதற்குரிய எண்ணம்—ஆற்றல் — துணிவு இந்த அமைச்சர்களுக்கு இல்லை. அமைச்சர்களின் வாய் சோஷலிசம் பற்றிப் பேசினாலும், உள்ளம் முதலாளித்துவத்தை வளர்ப்பதிலும்—காப்பதிலுமே இருக்கிறது; பஞ்சாப்—டில்லி வணிகர்களின் ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசிய அமைச்சரின் பேச்சு, முதலாளித்துவத்தை வளர்ப்பதிலே எவ்வளவு கவனமாக இருக்கிருர் என்பதையே விளக்குகிறது.

எனவேதான் கள்ளக் கடத்தல்களும்—பதுக்கல்களும் தீவிரமாக நடைபெறுகின்றன. உற்பத்தியாகும் பொருள்களை கடத்தல்—பதுக்கல் ஆகிய இரண்டுக்கும் ஆகாமல் கண்காணித்தாலே விலைவாசி உயர்வை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

இந்த ஆண்டு மத்திய அரசு ரூ. 71 கோடிக்கும், மாநில அரசு ரூ. 7 கோடிக்கும் புதியவரி விதித்துள்ளது. மேலும் மேலும் வரி விதிக்கப்படுவதாலும் விலைவாசி உயர்கிறது. பண்டங்களின்மேல் விதிக்கப்படும் வரி அப்பண்டத்தின் விலைவாசி உயர்வுக்குக் காரணமாகிறது. உதாரணமாக ஒரு பொருளின் விலை ரூ. 50 என்ருல், அதற்கு அரசு விதித்துள்ள வரி ரூ. 2-ம் சேர்த்து கடை முதலாளி மக்களிடமிருந்து ரூ 52 வாங்குகிருர். எனவே முதலாளிகள் மீது தான் வரி விதிக்கிரேம், அது ஏழைகளைப் பாதிக்காது என்று அமைச்சர்கள் பேசுவது மக்களை ஏமாற்றும் பேச்சாகும். ஆகையால் வரி விதிப்பின் காரணமாகவும் விலைவாசி உயர்ந்து மக்கள் அவதிப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

மேலும் விலைவாசி உயர்வதற்கு பல்வேறு காரணங்களும் உண்டு. கடை வீதிகளிலும்—சந்தையிலும் பேசப்படுகின்ற பேச்சு விலைவாசி உயர்வுக்குரிய காரணங்களை தெளிவாக விளக்கும். அதை அப்படியே இங்கு தொகுத்துத் தருகிரேம்.

தேவை அதிகரிப்பு

இவ்வருடம் பருவமழை தவறி விட்டதால் தவசம்—கேப்பை—சோளம் முதலிய உணவுப்பொருட்கள் சுமாரான விளைச்சல், சரக்கு அதிகப்படியாக வரத்து இல்லை. வெளியூர் புள்ளிகள் இங்கு வந்து வாங்குவதால் தேவை அதிகம் இருக்கிறது; ஆகையால் விலை கூடுகிறது.

பதுக்கல்

பெரிய வியாபாரிகள் ஏராளமாக வாங்கி இருப்பு (Stock) வைக்கிருர்கள். ஆகையால் மார்கட்டில் சரக்கு தட்டுப்பாடு. ஆகையால் தான் உளுந்து—துவரை மற்றப் பயிறுவகைகள் விலை கூடிவிட்டது.

கடத்தல்

பக்கத்து மாநிலத்தில் அரிசிக்கு நல்ல விலை இருக்கிறது. ஆகையால் தினம் லாரி-லாரியாக அரிசி அங்கு (கடந்து) போவதால் விளைச்சல் நன்றாக இருந்தும் விலை கூடுகிறது.

ஏற்றுமதியால்

கணிசமான இருப்பு இல்லை. நடப்பு விலையும் கூடுதல். இந்நிலையில் கடலை எண்ணெய் வத்தல்—புளி—வெங்காயம்—வெல்லம் முதலிய சரக்குகள் ஏற்றுமதி செய்ய அரசு அனுமதித்திருக்கிறது. எனவே ஏற்றுமதிக்கு ஏராளமாக சந்தைகளில் வாங்குவதால் விலை கூடிவிட்டது.

இறக்குமதியால்

எப்போதுமே அதிகமாக இறக்குமதியாகிவந்த பாக்கு—கொப்பரை—பால்பவுடர்—மருந்து முதலியவற்றில் இவ்வருஷம் இறக்குமதியில் வெட்டும் சில மாற்றமும் அரசு செய்ததால், அவைகளின் விலை உயர்ந்துவிட்டது.

போக்குவரத்தால்

வடக்கிலிருந்து வந்து சேர வேண்டிய வாகன்கள் வந்து சேரவில்லை. சரக்கு வாங்கிப் போட்டு ஒரு மாதமாகிறது. வாகின் சப்ளை இல்லாததால் புக் ஆகவில்லை, புக்கிங் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் கடலை—பட்டாணி—துவரை முதலிய வடநாட்டிலிருந்து வரக்கூடிய சரக்குகள் தட்டுப்பாடு. விலையும் கூடிவிட்டது.

வரி விதிப்பால்

என்ன ஐயா, தீப்பெட்டி 5 குரோஸ் கொண்ட பண்டல் 1 க்கு விலை $31\frac{1}{2}$ தானே விற்றீர்கள்; இப்போது ரூ. 34 என்கிறீர்களே! ஏன் விலையை கூட்டிவிட்டீர்கள் என்று கேட்டால், சர்க்கார் வரியைக் கூட்டி இருக்கிருர்கள். ஆகையால் விலை கூடிவிட்டது என்று பதில் கிடைத்திருக்கிறது. இதுபோன்றே சர்க்கார் வரி விதிப்புக்கு ஆளான அத்தனை பண்டங்களின் விலையிலும் உயர்வு ஏற்படுகிறது.

பாங்கிகளால்

தற்போது விலையை குறைத்து விற்கும் உத்தேசம் இல்லை; இன்னும் இரண்டு மாதம் போனால் விலை கிடைக்கும் அதுவரை பாங்கியில் லோன் போட்டு வைத்திருந்து நல்ல விலை கிடைத்தபின் விற்போம்!

"விலைகள் ஏன் கூடிவிட்டது" என்று கேட்டால், மேலே குறிப்பிட்ட விதமாக வியாபாரிகள் விளக்கம் சொல்லுவார்கள். அதாவது அவர்கள் சொல்லுகிற விளக்கத்திலிருந்து, தேவை அதிகரிப்பு (அதாவது பற்றாக்குறை) — பதுக்கல்—கடத்தல்—ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையால் — போக்குவரத்து வசதிக் குறைவால் — வரி விதிப்பால்—பாங்கிகள் உணவுப் பொருள்களின் மீது கடன் கொடுப்பதால் விலைவாசி உயர்கிறது என்பது தெளிவாகிறது.

இந்த நிலைமைகளை எல்லாம் ஆய்ந்தறிந்து, விலைவாசி குறைய ஆட்சியாளர்கள் மனம் வைத்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். காங்கிரஸ் ஆட்சியாளர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால்-அல்லது தயங்கினால் அவர்களை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றி விலைவாசி குறைய — நல்லாட்சி காண அதற்குரிய ஆற்றல்—அறிவு துணிவு பெற்றவர்களை ஆட்சியில் அமரச் செய்யவேண்டும் மக்கள்!

எனவே, விலைவாசி குறைய அமைச்சர்களின் மனம் இருந்தால் மார்க்கம் உண்டு! அதைச் செய்யாத ஆட்சியாளர்களை ஆட்சியிலிருந்து அகற்றிட மக்களுக்கு மனம் இருந்தால் மார்க்கம் உண்டு!

மதுரை எழுத்தாளர் மன்ற ஆண்டுவிழாப் போட்டி முடிவு

மன்றத்தார் ஆண்டுதோறும் நடத்திவரும் கட்டுரை, சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம், கையெழுத்து ஏடு ஆகியவற்றிற்கு போட்டிவைத்து பரிசளிப்பதுபோன்று இவ்வாண்டும் போட்டியில் வெற்றி பெற்ருேர்க்கு பரிசளிக்கப்படுகிறது. ஜுலைத் திங்கள் 22ஆம் நாளில் நடைபெறவிருக்கும் மன்ற ஆண்டுவிழாவில் வெற்றி பெற்ருேர்க்கு பரிசுகள் வழங்கப்படும். போட்டியின் முடிவு கீழே தரப்பட்டுள்ளது.

கட்டுரை	பெயர்	ஊர்
I பரிசு	ச. ப. 'துரையரசன் B.A.	வெள்ளமடை
II பரிசு	நா. தண்டபாணி	அம்பல்
III பரிசு	கா. மாணிக்கவாசகம்	மதுரை
கவிதை	**பெயர்**	**ஊர்**
I பரிசு	காரை. இறையடியான்	காரைக்கால்
II பரிசு	நா. இளங்கோவன்	மாயூரம்
III பரிசு	கதிர்மணி	மதுரை
சிறுகதை	**பெயர்**	**ஊர்**
I பரிசு	து. ராசேந்திரன்	மதுரை
II பரிசு	பு மு. சாந்தமூர்த்தி	மதுரை
III பரிசு	அ. வெற்றிவேலன்	மாயூரம்
ஓரங்க நாடகம்	**பெயர்**	**ஊர்**
I பரிசு	கே. கண்ணுசாமி	வத்தலக்குண்டு
II பரிசு	திருச்சி சந்தர்	மதுரை
III பரிசு	செந்தி	சென்னை
கையெழுத்து ஏடு	**பெயர்**	**ஊர்**
I பரிசு	தமிழ்மணி	கான்பூர்
II பரிசு	தமிழ்ப்பொய்கை	புதுப்பட்டி
III பரிசு	முகிழ்நிலா	மதுரை

கலவரத்துக்குக் காரணம் யார்?

—()—

'தமிழ்நாடு' நாளிதழ் தரும் தீர்ப்பு!

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துதல் பற்றித் தீவிரமாகச் சிந்திக்குமாறு அரசைத் தூண்டவேண்டி, மாநிலம் முழுதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மேற்கொண்ட அறவழி அறப்போரில் ஏறத்தாழப் பதினையாயிரம் பேர் சிறைப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. சிறைக்குள் அடைக்கப்பெற்றவர்களில் பதினைந்து சட்ட மன்ற உறுப்பினர்களும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் இருப்பதாகத் தெரிகிறது.

கழகத் தலைவர்களும், தொண்டர்களும் மேற்கொண்ட இவ்வறப்போரின் நிறை குறைகள் பற்றிப் பலவாறான கருத்துக்கள் நிலவுகின்றன. அறப்போர் என்று கூறிக்கொண்டு அவர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகச் சிலர் அவர்கள் மீது குற்றம் சாட்டியுள்ளனர். வேறொரு தரப்பினர் காவலர் படையினர் கழகத் தலைவர்களைப் பொறுமையின்றிச் சிறைப்படுத்தியதாலேயே, அக்கட்சியின் ஆதரவாளர்கள் வன்செயல் புரிந்தனர் என்று நினைக்கின்றனர்

இத்தகைய முரணான கருத்துக்களுக்கு இடையில் நடுநிலை நின்று நிலைமையை ஆராய்தல் நம்மனோரின் கடமையென நினைக்கின்றோம்.

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, உற்பத்தியைப் பெருக்கி, நாட்டின் பொருளாதாரத்தையும் பொதுமக்கள் வாழ்க்கை நிலையையும் உயர்த்தத் திட்டங்கள் பலவற்றை ஆட்சியாளர் செயலாக்கி வந்தபோதிலும் இன்றியமையாப் பண்டங்களின் விலை விண்ணென உயர்ந்து சென்றவண்ணம் இருக்கிறது. இவ்வெளிப்படையான உண்மையை அரசு உட்பட யாரும் மறுக்க முடியாது.

இதற்குச் சிறப்பான காரணம் எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்தி பெருகாதது மட்டும் அன்று. மாறாக, ஆற்றலைக் கடந்த திட்டங்களை ஆட்சியாளர் வகுத்ததும் அதற்காக ஈடுசெய்ய இயலாத பற்றாக்குறை வரவு—செலவைக் கைக்கொண்டு பண வீக்கத்தை ஏற்படுத்தியமையும் விலைவாசி ஏற்றத்திற்கு முக்கிய காரணமாகும்.

அத்துடன் வளர்ச்சித் திட்டங்களின் பேரால் பொது நிதி கணக்கின்றி வீண் விரயமானதாலும் பல முன்னேற்றப் பணிகள் தொடங்கிப் பல ஆண்டுகள் கழிந்த பிறகும் உற்பத்தியில் ஈடுபடாமல் வாளா இருப்பதாலும், விலைவாசிகள் மேற்கொண்டும் உயர்வதாயின.

இதன் விளைவாகப் பொதுமக்களுள் மிகப்பெரும்பாலோர் அடைந்துவரும் இன்னல்கள் சொல்லுந்தரமன்று. எனவே, விலைவாசிக் கொடுமையை அரசு உள்ளவாறு உணர்தற் பொருட்டு, யாரேனும் அறப்போர் மேற்கொண்டால் அதைத் தவறென்று கூறுதல் பொருந்தாது.

எனினும் இக்கிளர்ச்சியை முற்றிலும் அமைதியான முறையில் கழகத்தினர் நடத்த முடியாமற் போனமை வருந்தத் தக்கதேயாகும். ஆனால், அதற்கு அவர்களே முழுப்பொறுப்பு என்று அறுதியிட்டுக் கூறுதல் ஆகாது.

எடுத்துக்காட்டாக மதுரை போன்ற பல பெரு நகர்களில் அறப்போர் மிக அமைதியாக நடந்துள்ளது. மொத்தத்தில் சென்னை, வேலூர் ஆகிய இரண்டு இடங்களிலேயே வன்செயல்கள் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன?

மேற்கூறிய இரு இடங்களிலும் கழகத்தின் பெருந்தலைவர்கள் அறப்போரை முன்னின்று நடத்தினர். எனவே அங்கு மக்கள் திரளாகக் கூடுவதும், உணர்ச்சி வயப்படுவதும் இயல்பாகும். இதை முன்கூட்டியே அறிந்து, காவலர்கள் சற்றுப் பொறுமையுடனும் எச்சரிக்கையோடும் நடந்து கொண்டிருந்தால் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் பலவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் எல்லா இடங்களிலும் போன்று, அங்கும் தலைவர்களையும் தொண்டர்களையும் கைது செய்ய முற்பட்டனர். அதன் நேரடி விளைவாகவே வன்செயல்கள் நிகழ்ந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

இத்துயர நிகழ்ச்சியின் தன்மை யாதாயினும், ஆட்சியாளரும் எதிர்க்கட்சியினரும் பிணக்கு விடுத்து மக்களை வருத்தும் விலைவாசிக் கொடுமை குறித்துத் தீர ஆராய்ந்து உருப்படியான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுதல் தலையாய கடமையென வற்புறுத்துகிறோம்.

—24—7—62 'தமிழ்நாடு' நாளிதழ் தலையங்கம்.

சிறையில் அறிஞர் அண்ணா

—(0)—

வேலூர் சிறைச்சாலையில் இருக்கும் அறிஞர் அண்ணா அவர்களை, கழக அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், தொழிற்சங்கச் செயலாளர் எ. கோவிந்தசாமி நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி., க. இராசாராம் எம்.பி., நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி எம்.எல்.சி., சட்டமன்ற தி. மு. க. கட்சி துணைச்செயலாளர் இராம. அரங்கண்ணல், உறுப்பினர்கள் புலவர் கோவிந்தன், எஸ். ஜே. ராமசாமி, கமலநாதன், கரிவேங்கடம், ராசாங்கம், வழகமுத்து மற்றும் வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, முல்லை-சக்தி, முரசொலி மாறன், என். வி. என். சோமு ஆகியோர் சந்தித்தனர்.

அண்ணா அவர்களுடன், அவருடன் சிறைப்பட்ட தோழர்கள் இரா. தர்மலிங்கம் எம்.பி., எம். பி. வடிவேலு எம்.எல்.ஏ., சம்பங்கி எம்.எல்.ஏ., மா. பா. சாரதி, சி. வி. ராசகோபால், டி. கே. பொன்னுவேலு, எம். எஸ். வெங்கடாசலம், தேவராசன் எம்.சி., இளஞ்செழியன், அவரது துணைவியார் ஆகியோர் மகிழ்ச்சியுடன் பார்க்க வந்திருந்த தோழர்களுடன் உரையாடி பின்னர் அனைவரும் அண்ணா அவர்களிடமும் தோழர்களிடமும் விடைபெற்று சென்னை திரும்பினர்.

ஃ

சென்னைச் சிறையில் இருக்கும் கழக வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு அவர்களையும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், எம்.எல்.ஏ. ப. சிவசங்கரன் எம்.பி. நடிகமணி டி. வி. நாராயணசாமி எம். ஆர். கண்ணன், எம்.சி. கே. எஸ். தினகரன் எஸ். எம். துரைராஜ் சி. ஆர். பாலசுந்தரம் ம. ரா. ஏழுமலை அறமேலு அப்பாதுரையார் கே.எம். கண்ணபிரான். சி. சிட்டிபாபு எம்.சி., நல்லையா உட்பட தோழர்கள் அமைப்பு செயலாளர் என். வி. நடராசன் தொழிற்சங்கச் செயலாளர் எ. கோவிந்தசாமி, க. ராசாராம் எம்.பி., வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., என்.வி.என். சோமு ஆகியோர் சந்தித்தனர்.

சி. பி. சிற்றரசு அவர்களின் உடல் நலன் குறித்து அனைவரும் ஆவலோடு விசாரித்து, சிறிது நேரம் உரையாடிப் பின் விடைபெற்றனர்.

இலங்கை அரசினருக்கு வேண்டுகோள்!

—(0)—

இலங்கை அரசின் ஆட்சிமுறையும், அது பிறப்பிக்கும் உத்திரவுகளும், இலங்கைவாழ் தென்னாட்டு மக்கள் தங்களின் எதிர்கால வாழ்வைப்பற்றி நம்பிக்கை கொள்ளச் செய்வதாக யில்லையென்றே தெரிகிறது.

இலங்கையின் தலைநிமிர்ந்த வாழ்வுக்கு அங்குவாழும் தமிழ் மக்கள் செய்த மாபெரும் தியாகத்தை—தொண்டினை, பணியினை நன்றியுடையோர் மறக்கவோ—மறக்கவோ துணியார்.

எனவே, இலங்கைவாழ் தென்னாட்டு மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக, கெடுபிடி உத்திரவுகளும், தடைகளும் விதிப்பது பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டதாகாது.

ஆதலின் காலமெல்லாம் உழைத்துழைத்து உருக்குலைந்துபோன இலங்கைவாழ் தென்னாட்டு மக்களின் நியாயமான கோரிக்கைகளை இலங்கை அரசு அருள்கூர்ந்து நிறைவேற்றித்தந்து இலங்கைவாழ் தென்னாட்டு மக்களின் ஒருமித்த ஒத்துழைப்பையும், பேரன்பையும் பெற முனையுமாறு இதயபூர்வமாக வேண்டுகிறோம்.

வாணி தமிழ் - இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம் விலை ரூ. 5.
வி. பி. பி. செலவு ரூ. 1. 25.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப்பு, இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், ஸ்னோ, பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 206 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ. 4 வி. பி. பி. செலவு 85 ந. பை.

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டுச் சரக்குகளைக்கொண்டு நோய்களைப் போக்கி ஆரோக்கியம் பலம், ஆண்மை பெறுவதுபோன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50.

மெஸ் மெரிச மர்மம்

ஆச்சரியம், அற்புதம், மனோவசியத்தைப்பற்றியும் அதை அப்பியாசிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும் படங்களுடன் கூடி எழுதப்பட்டிருக்கிறது. தபால் செலவோடு ரூ. 3-50.

வாணி புக் டிப்போ: 3. மலையப் பெருமாள் தெரு, சென்னை-1
மாடியில் ரூம் நெ. 5.
(தபால் பெட்டி எண்: 239)

பதிவு எண்: 7178 — திராவிடன் — தொலைபேசி 33581

அகிம்சாமூர்த்திகளின் அடக்குமுறையைக் காணீர்!

தலைநகரில் காங்கிரஸ் ஆட்சியின் கொடுங்கோல் பட்டியல் பாரீர்!

ஆட்சியாளரின் வெறியாட்டத்தின் தன்மைகளை அறிய அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், கி. மனோகரன் எம்.பி., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி எம்.எல்.சி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., வெ.கிருட்டிணமூர்த்தி எம்.எல்.ஏ, கமலநாதன் எம்.எல்.ஏ சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், டபிள்யூ. பி. பி. சுந்தரம் ஆகியோர் நகரின் பகுதிகளைச் சுற்றிப்பார்த்தனர் அவர்களிடம் கழகத் தோழர்கள் போலிஸ் அக்கிரமங்கள் பற்றி எடுத்துரைத்த விவரமாவது :—

மெரினா பகுதி மாட்டான்குப்பம் தோழர் வரதன் என்பவரைப் பிடித்து கையைப் பின்னல் கட்டி, அடித்து இழுத்துப் போலீசு வண்டியில் போட்டுக்கொண்டு போயிருக்கிறார்கள்.

அந்தப் பகுதிக் கழக நிர்வாகிகளின் பெயர்களைக் கேட்டு, வட்டக் கழகச் செயலாளரான க. இளவரசு அவர்களின் வீட்டிற்குள் புகுந்து அறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படத்தைத் தூக்கிக் கீழே எறிந்து தூள்தூளாக உடைத்தனர். வீட்டில் வெளியே பறந்து கொண்டிருந்த கழகக் கொடிக் கம்பத்தைப் பிடுங்கி எறிந்தனர்.

அப்பகுதியிலுள்ள செனல் வீதியில் எஸ். எஸ். ஆர். மன்றத்தின் உள்ளே புகுந்து தலைவர்கள் படத்தையும் பெயர்ப் பலகையையும் உடைத்துத் தள்ளியிருக்கிறார்கள். அடுத்து இருக்கும் வீடுகளின் கதவுகளைத் தட்டி, உடைத்து வெறியாட்டம் புரிந்தனர்.

போலீசாருடைய சப்தம் கேட்டு எழுந்த தாய்மார்களைப் பார்த்து, 'எங்கேயடி உங்கள் அண்ணா?— ரூபாய்க்கு 4 படி அரிசி போடுகிறவன்' என்று கேவலமான வார்த்தைகளால் திட்டியிருக்கின்றனர்,

வெங்கட்ரங்கம் பிள்ளைத் தெருவில் ரிக்ஷாத் தொழிலாளர்கள், வீதியில் படுத்திருக்கும்போது அவர்களை உதைத்து எழுப்பி, அவர்களது குழந்தை குட்டிகளையும் மிரட்டி அடித்து விரட்டியிருக்கிறார்கள்.

கைலாசபுரத்திலுள்ள தமிழ் இலக்கிய மன்றத்தின் உறுப்பினர்களான மணி, கணேசன் மற்றும் தோழர்களை நடுநிசியில் பிடித்து, கேவலமான வார்த்தைகளால் திட்டி அடித்திருக்கின்றனர்.

அந்தப் பகுதியிலுள்ள கழகத் தோழர்களின் வீடுகளிலிருந்த சாமான்களை எல்லாம் காலால் உதைத்து உடைத்துச் சேதப்படுத்தி இருக்கின்றனர்.

பிள்ளைசெட்டி தோட்டப்பகுதியிலுள்ள ஒரு கழகத் தோழரை நையப்புடைத்து, மயக்கமடைந்த பிறகு இழுத்துச் சென்றார்கள்.

காசிமேடு சொக்கலிங்க கிராமணி தோட்டத்திலுள்ள கழகத் தோழர்கள் 19 பேரை அடித்து, தெருவழியே இழுத்துச் சென்றார்கள்.

காசிமேடு கடலோரப் பகுதியிலுள்ள திராவிட நற்பணி மன்றத்திலிருந்த மாவட்டப் பிரதிநிதி, சாரங்கபாணி, பகுதிப் பிரதிநிதி அன்பரசன், சாமி முதலியோரைப் பிடித்து, காலால் எட்டி உதைத்து, இழுத்துப் போனார்கள்.

டன்னேமரத் தொட்டிப் பகுதியில் புகுந்து, அங்குள்ளோரை மிரட்டி, இரண்டு தாய்மார்களை இழுத்துச் சென்றிருக்கிறார்கள்; 'கொடி ஏற்றினால், அடுத்த நிமிடம் போலீசு நிலையத்தில் இருப்பீர்கள்' என்றும் மிரட்டியிருக்கிறார்கள்; 'அண்ணா படமோ, சாவண்டரோ இருந்தால் அடிபட்டுச் செத்துப்போவீர்கள்' என்றும் பகிரங்கமாக மிரட்டியுள்ளார்கள்.

மூலக்கொத்தளம் பகுதியிலுள்ள தோழர் பலராமன் முதலிய ரிக்சாத் தொழிலாளர்களைப் பிடித்துக்கொண்டுபோய் உதைத்திருக்கிறார்கள். புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். தந்த மழைக் கோட்டுகளைப் போட்டிருந்த காரணத்திற்காகவே பல ரிக்ஷாத் தொழிலாளர்கள் அடித்து இழுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்! எம். ஜி ஆர் மழைக் கோட்டுகளைப் பிடுங்கி தீ வைத்துள்ளனர்.

போலீசாரின் குறிக்கோள் முழுவதும், இந்தமாதிரி தொழிலாளர்களை வேட்டையாடி ஒழிப்பதில் ஈடுபட்டிருக்கின்றது.

சுந்தரபுரத்தில் தாய்மார்கள் பலரும் கேவலமான முறையில் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

ஏழுகிணறு என்னும் பகுதியில் சைக்கிள் ரிக்ஷாக்காரர்களும், கை ரிக்ஷாக்காரர்களும் எம். ஜி. ஆர். மழைக்கோட்டு போட்டிருக்கும் காரணத்திற்காகத் தாக்கப்படுகிறார்கள்.

இதுவரையில் ஏராளமான கழகக் கொடிகள் இறக்கி, கிழிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்டான்லி நகரில் ஏழை ஆதித் திராவிட மக்கள் மிருகத்தனமாகப் போலீசாரால் தாக்கப்பட்டிருக்கின்றனர். கருப்பு—சிவப்புத் துணியைக் கண்டாலே மிரண்டு உதைக்க ஆரம்பிக்கிறார்கள்.

அம்பேத்கார் நகரில் போலீசு வான், மூலைமுடுக்கெல்லாம் புகுந்து வேட்டையாடியிருக்கிறது. கழக ஊழியர்களை முகம்பாராமல், காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருக்கிறார்கள்.

சிவராசபுரத்தில் போலீசார் பெண்களை மிக மோசமான முறையில் பேசித் தாக்கியிருக்கின்றனர்.

கைவண்டிக்காரர்களும் மிகக் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். கொடிமரத்தை முறித்திருக்கிறார்கள்! அண்ணா படத்தையும், எம் ஜி ஆர் படத்தையும் பிடுங்கிக் கீழே எறிந்த பூட்சு காலால் உதைத்திருக்கிறார்கள்! என். எஸ். கே. மன்றத் தோழர்கள் நியாயமற்ற முறையில் ஏசப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்!

அந்தப் பகுதியில் இரவு 1 மணிக்கு மேல் போலீசு வான் வரும்; எல்லோரையும் உதைக்கும்; சிலரை இழுத்துச் செல்லும்—என்ற பீதி, இடபோதும் நிலவுகிறது.

இந்திராணி எனும் கர்ப்பிணியை வீடு புகுந்து இழுத்து வந்தார்கள்; 'நிறைமாதம்' என்று தெரிந்தும், இதயமில்லா 'அரக்கத்தனமாக' அடித்தனர்!

'இந்தக் கொடுமையிலிருந்து தப்ப காங்கிரசில் சேருங்கள்' என்றும் போலீசார் அரசியல் பிரச்சாரம் செய்கிறார்கள்!

இராஜா தோட்டம் பகுத்தறிவு மன்றத்தில் போலீசார் புகுந்து தலைவர்கள் படத்தைத் தூக்கிவெளியே எறிந்தனர்! உண்டியலை உடைத்து எறிந்தனர்! பெயர்ப் பலகையைத் தூள் தூளாக்கினர்!

மன்றத்திற்கு இடம் தந்ததற்காக அந்த இடத்தின் சொந்தக்காரரான காளியம்மாள் என்ற நிறைமாதக் கர்ப்பிணியை உதைத்து ஏசினர்! மிருகத்தனமாக வயிற்றில் எட்டி உதைத்தனர்!

ஆயிரம்விளக்கு மக்கித்தோட்டத்தில் தொடர்ந்து போலீசு வேட்டை நடக்கிறது! இளஞ்சிறார்கள் என்றுகூடப் பார்க்காமல் தடியால் அடித்துப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்!

சென்னை 57-வது வட்டம் (ஆயிரம் விளக்கு கிழக்கு) மக்கித் தோட்டத்தில் 21—7—62 மாலை 7 மணியிலிருந்து 8-மணிவரையிலும் போலீசார் பொதுமக்களை வேட்டையாடினர்.

ஒன்றுமறியாதவர்களையும், கட்சி சார்பற்றவர்களையும், வேலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்களையும் குறிப்பாகக் குடிசை பகுதியிலுள்ள ஏழை ஆதி திராவிட மக்களையும் பிடித்து அடித்து லாரியில் ஏற்றிச் சென்றார்கள். எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

20—7—62 இரவு 10-மணிக்கு போலீசு இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், சுமார் மூன்று லாரிகளில் ஆயுதப் போலீசுக்காரர்களுக்கு மேல் சாக்ஸ் சேரியில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களை வீடு புகுந்து அடித்து, துன்புறுத்தியுள்ளனர் என தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்னை சேனும்பேட்டை பகுதியில் போலீசாரின் அக்கிரமச் செயல் அளவுக்கு மீறுகிறது.

கழகத் தோழர்களின் வீடுகளில் நள்ளிரவில் புகுந்து, உறங்கும்போது கைது செய்துகொண்டு செல்கின்றனர்.

தேனாம்பேட்டைப் பகுதி கழகப் பொருளாளர் தோழர் கோவிந்தன் என்பவரை நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்துள்ளனர்; காரணம் கேட்டமைக்கு 'சந்தேகம்' என்று கூறுகின்றனர் எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்னை புரசவாக்கம் 43வது வட்டத் தி. மு. க. செயலாளர் தி. வெற்றிவேந்தன், பொருளாளர் அ. எழிலன், திருவாட்டி சதானந்தவதி மன்றத் தலைவர் கோவிந்தசாமி உட்பட மற்றும் கழகத் தோழர்களைப் போலிசார் கைது செய்துகொண்டு போயிருக்கிறார்கள்.

சென்னை 94வது வட்டம் தியாகராய நகர்லுள்ள வெங்கட்ட நாராயணா ரோடில். 20-7-62 அன்று இரவு 10-30 மணியளவில். சைதாப்பேட்டை காவல் நிலையத்திலிருந்து படையினர் வந்து தேநீர் விடுதியில் தேநீர் அருந்தியவர்களையும் தேநீர் வழங்குபவர்களையும், பணம் பெறுபவரையும் பக்கத்தில் வெற்றிலைப் பாக்குக் கடையில் உள்ள பணி, துரை. தருமன் மற்றும் திரு. வி. க. மன்றத்திலிருந்த திருவேங்கடம். ரங்கசாமி, மற்றும் நண்பர்களையும் தாக்கினர்.

இசைக்குழு மன்றம் பக்கமாக உள்ள குடிசையின் உள்ளே நுழைந்து தாய்மார்களை அச்சுறுத்தியும் அங்கு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பல நண்பர்களையும் பெரியவர்களையும் போலீசார் தடி கொண்டு தாக்கினர்.

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர்: சோமு அச்சகம், வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1.

மாநிலங்கள் அவையில்

அண்ணாவின் சொற்போர்!

சட்டத்தின் மதிப்பை இழக்கச் செய்யாதீர்!

நீங்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தி, அடிப்படை உரிமைகளை மாற்றினீர்களேயானால், அது அந்த அறைகூவலை ஏற்கும்படி மக்களுக்கு அழைப்பு விடுவது போலத்தான் இருக்கும். எந்த ஒன்றைப் பற்றியாவது எவனுவது பலமாகவும், உண்மையாகவும் உணர்வானேயானால், அவன் விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த இலட்சியத்துக்கு பாடுபடுவது எதிர்பார்க்கப்படுவதுதானே!

ஆனாலும் இதை வெறும் சட்ட அமைதிப் பிரச்சினையாக நோக்க வேண்டாம். அரசியல் ரீதியான தீர்வுகாணக் கூடிய பிரச்சினையாக நோக்குவோம்.

புதுமையானது என்பதற்காக நான் பிரிவினைக் கொள்கையை வலியுறுத்தவில்லை.

என்னுடைய பிராந்தியத்தில் வளர்ந்து வரும் ஒரு மக்கள் பிரிவு இப்போது இருக்கிற அரசியல் அமைப்பு—இப்போது இருக்கிற அரசியல் கூட்டாட்சி முறை—எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை என்று கூறியிருக்கிருர்கள்.

அதனுல்தான், பலகால கூட்டாட்சி அனுபவத்திற்குப் பிறகு தி. மு. க. வைச் சேராதவர்கள் கூட தீவிரமான அரசியல் தீர்வு காணப்படாதவரை இந்தக் கூட்டாட்சி, கால வெள்ளத்தை எதிர்த்து நீடித்து நிற்க முடியாது என்று உணர்ந்திருக்கிருர்கள்.

அரசியல் சட்டத்தைத் தவிர, இது ஒரு மனசாட்சிப் பிரச்னையுமாகும். பிராந்திய வேறுபாடுகளையும், மொழிப் பூசல்களையும் யாரும் புறக்கணிக்க முடியாது. இவற்றையெல்லாம் பெருக்கிக் கொண்டே போனுல் இந்திய யூனியனில் ஒரு அங்கமாக இருப்பது மனுேதத்துவப்படி ஏகாதிபத்தியத்தில் முடிவதையும், பொருளாதாரத்தில் எங்கள் பிராந்தியம் பிற்போக்கு நிலை அடைவதையும், பிரிந்து வாழ்ந்தால் இருக்கும் நிலையைவிடத் தாழ்ந்த நிலையும் ஏற்பட்டுவிடும் என்பதையும் நீங்களே உணரக்கூடும்

இந்த் நேரம் உங்களுக்கு ஸ்காண்டிநேவிய நாடுகளின் யூனியனை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஸ்காண்டிநேவிய நாடுகளின் யூனியன் 400 ஆண்டுகள் வாழ்ந்தபிறகு, துண்டுதுண்டாகச் சிதறியதை நான் இங்குச் சொல்லிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் அந்தப் பேச்சை எழாமல் அடக்கி விட்டோம் என்று நாம் நினைக்கக் கூடாது.

அப்படி ஒரு சட்டம் உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்படுவதால் நீங்கள் சட்டம் செயல்படாத நிலையையும், சட்டத்தை மீறும் சூழ்நிலையையும் உருவாக்குகிறீர்கள்.

அதனுல்தான் ஒவ்வொருமுறை சட்டம் தீட்டும்போதும் ஒன்றுக்கு நூறு முறை நீங்கள் சிந்திக்கவேண்டும்.

''அரசியல் நிலையில் பிரிவினைக் கொள்கையுடன் ஆளுங்கட்சி போராட வேண்டும்.'' அப்படி அரசியல் களத்தில் எங்களைச் சந்திக்க நீங்கள் ஏன் வெட்கப் படவேண்டும் என்றும் ''பிரிவினைத் தடை மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் சட்டத்தை மீறும்படியான சூழ்நிலையை அரசு உருவாக்குகிறது'' என்றும், ''அடிப்படை உரிமைகளை பறிக்கும் ஒரு மசோதாவைக் கொண்டு வருவது ஆட்சி உரிமையோ மக்களாட்சி முறைமையோ அல்ல; ஆட்சி உரிமை என்பதற்கு அதிகாரம் ஓர் இடத்தில் மட்டும் குவிந்திருக்கவேண்டும் என்பது பொருளல்ல.''

இப்போதுள்ள கூட்டமைப்பு ஆட்சியின் அரசியல் அமைப்பு நிலை தங்களுக்கு நன்மை அளிக்காதென்று என் பகுதியைச் சேர்ந்த மக்கள் திடமாக நம்புகிருர்கள். இதை மிகவும் ஆழ்ந்த முறையிலும் கருதுகின்றனர்.

ஏதாவது தீவிரமான கருத்தை மேற்கொண்டாலன்றி ஏதாவது ஒரு புதிய முறை அரசியல் அமைப்பை ஏற்படுத்தினுலன்றியும் இந்தக் கூட்டமைப்புப் பளுவையும் நெருக்கடிகளையும் தாங்கமுடியாது என்று எங்கள் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டும் எண்ணவில்லை, எங்கள் கழகத்தில் சேராத வேறு பலரும் இவ்வாறு எண்ணுகின்றனர்.

1945-ம் ஆண்டு பண்டித நேரு கபூர்தாலாவில் பேசுகையில் இந்திய யூனியனிலிருந்த எந்த ஒரு பகுதியும் பிரிந்து போக உரிமை உண்டு என்று கூறியிருக்கிருர்.

பிரிவினைப் பிரச்சாரம் அரசியல் சட்டத்துக்கு எதிரானதா என்பது பற்றி சட்டநூல் அறிஞர்களிடை வேறுபட்ட கருத்து நிலவுகின்றது. இந்த அவையின் உறுப்பினரான வழக்கறிஞர் திரு பி. என். சாப்ரு பிரிவினையை எதிர்த்து எழுதியுள்ள ஒரு கட்டுரையில் அரசியல் சட்ட முன்னுரையை திருத்த முற்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் மற்றவர்கள் அனைவரையும் விட நேர் எதிரான கருத்துக்களை கொண்டிருக்கக் காரணம் பற்றி இந்த அவை உறுப்பினர்கள் சிந்திக்கவேண்டும். இதற்கு மன நிலையில் ஏற்பட்டிருக்கும் எண்ணங்கள் காரணமாகும்.

இந்த பிரிவினைத் தடை மசோதாவை நான் எதிர்ப்பதன் மூலம் நான் இந்த அவையில் உள்ள என் மதிப்புக்குரிய ஒவ்வொரு உறுப்பினர்களின் எண்ணத்திற்கும் மதிப்புக்கும் மாருக நடக்கிறேன் என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன். ஆயினும் இதை மற்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வட்டார, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் மொழி வேறுபாடுகளும் நிலவுவதை யாரும் புறக்கணிக்க முடியாது.

ஆட்சி உரிமையும் மக்களாட்சியும் அரசியல் சட்டத்தின் இரு முக்கிய கொள்கைகள் என்று அமைச்சர் கூறியதை அண்ணா அவர்கள் குறிப்பிட்டு அடிப்படை உரிமைகளை பறிக்கும் ஒரு மசோதாவைக் கொண்டுவருவது ஆட்சி உரிமையோ மக்களாட்சி முறையோ அல்ல, ஆட்சி உரிமை என்பதற்கு அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்திருக்க வேண்டும் என்பது பொருளல்ல.

அரசியல் நிலையில் பிரிவினைப் பிரச்சினையை எதிர்த்து கட்சி போராட வேண்டும். அரசியல் களத்தில் எங்களை சந்திக்கவும் அதற்கு ஏன் நீங்கள் வெட்கப் படவேண்டும்? இம்மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் கட்டத்தை மீறும்படி சூழ்நிலையைத் தான் அரசு உருவாக்கும்.

பிரிவினைத் தடை மசோதாவை கொண்டு வருவதற்கான அவசரமோ, அவசியமோ எதுவும் இல்லை. விட்டுகொடுக்கும் உள்ளப்பாங்குடன் இதைப்பற்றி உறுப்பினர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பிரிவினைத் தடைமசோதா நிறைவேறினுலும்கூட எல்லா அரசியல் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு பாராளுமன்றக் குழுவை அமைக்கவேண்டும் என்றும் உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் அந்த பாராளுமன்றக் குழுவிற்கு தானே பிரிவினைப்பற்றி போதிய அளவுக்கு தகவல் தருவதாகவும் உறுதி கூறினுர்கள்.

முடிவில் பிரிவினைத் தடை மசோதாவுக்கு ஆதரவுவாக 137 வாக்குகள் கிடைத்ததால் பெரும்பான்மை காரணமாக மாநிலங்கள் அவையில் மசோதா நிறைவேறியது.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒருவர் மட்டுமே மசோதாவை எதிர்த்து வாக்களித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

[நாட்டுப் பிரிவினையைத் தடைபடுத்தும் சட்டத்தின் மீது டெல்லி ராஜ்யசபையில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரை.

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

எனது வழிகாட்டிகள்!

மாற்றுக் கட்சியினர் நம்மைப்பற்றிக் குறை கூறுவதைக் கண்டு நாம் கவலைப்படத் தேவையில்லை.

நாம் இருப்பதே பிடிக்காதவர்கள், நாம் இறந்தால் கூட, ‘ஏன் இறந்தார்கள்? நானல்லவா கொல்ல இருந்தேன்?’ என்று சொல்லக்கூடியவர்கள் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள்!

இரண்டு பேருக்குத்தான் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டவன்; அந்த இருவர்தான் எனக்கு வழிகாட்டிகள்—தீர்ப்புச் சொல்லக்கூடிய நீதிபதிகள்! அவர்களில் ஒருவர் பொதுமக்கள்; மற்றொருவர் கழகத் தோழர்கள். இவர்களைத் தவிர மற்றவர்களை—அவர்கள் எவ்வளவு உயரத்தில் இருப்பவர்களானாலும் அவர்களை மூன்றும்—நான்காம் தரத்தில்தான் மதிப்பேன். அவர்களுக்குப் பதில் சொல்லித் தீரவேண்டிய அவசியத்தில் நான் இல்லை.

எனக்கு நீங்கள் கட்டளையிடுங்கள்—அதை மதித்து ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்கும் எனக்கும்தான் உறவு; நமக்கு உறவு இல்லாதவர்கள் கூறுவதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

—சென்னைக் கூட்டத்தில் அண்ணா

கத்துடைய கண்ணியத்திற்காக மட்டுமல்ல — தாய் மொழியினுடைய தன்னிகரற்ற எதிர்காலத்திற்காக மட்டுமல்ல—எதிர்காலச் சந்ததி அடிமையற்ற வாழ்விலே வாழ வேண்டும் என்ற அடிப்படைக் கருத்துக்காகவும் நீங்கள் அணிவகுக்க தயாராக இருக்கவேண்டும்.

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் என்னை போராட்டத்தைத் துவக்குவதானால் நூறு தடவை யோசித்துவிட்டுச் செய்யவும் என்றார்.

அவருக்கு நான் அங்கே சொல்லவில்லை — இப்போது சொல்கிறேன், நான் மாநிலங்களவையில் பேசுவதற்கு முன்னாலே 100 தடவை யோசித்து விட்டுத்தான் பேசினேன்; இப்போது யோசிப்பதெல்லாம் 110வது, 115வது, 120வது முறையாக இருக்கலாம்’என்று.

‘எண்ணித் துணிகக் கருமம்—துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு’...

இந்தக் கட்சியில் இல்லையே’ என்று கூறினால் பயனில்லை.

கருவாட்டுக் கடைக்கு ஒரு வாடை உண்டு; கற்பூரக் கடைக்கு ஒரு வாடை உண்டு; ‘இந்த வாடை அங்கு இல்லையே’ என்றோ, ‘அந்த வாடை இங்கு இல்லையே’ என்றோ கூறக்கூடாது!

நான் ஏதோ கருவாட்டுக் கடையைத் தாழ்த்திக் கூறிவிட்டதாக கருதிவிடவேண்டாம்.

கற்பூரம் கோயில் பூசைக்கு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்குக் கருவாடு, சாப்பாட்டுக்கு முக்கிய சுவையான பொருளாகும்; ஆனால், ‘இரண்டும் வேறு வாடையுள்ளது’ என்பதற்காகத்தான் இப்படிச் சொன்னேன்.

ஃ

‘ஆடுவதும் பாடுவதும்’… … …

“நேற்று மாலை நுங்கம்பாக்கத்தில் உள்ள எனது வீட்டில்

இந்தித் திணிப்பு - திட்டமிட்ட ஓர் சதி!

இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு முடிவெடுக்குமானால், போராட்ட அழைப்பு வரும்; அதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அழைப்பு எந்த நேரத்திலும் வரும் என்று எதிர்பார்த்துத் தயாராகக் காத்திருக்க வேண்டும். போராட்டத்தில் எல்லோரும் ஈடுபட வேண்டும் என்பதில்லை; வசதி வாய்ப்புக் குறைந்தவர்கள் ஈடுபடத் தேவையில்லை; விலகியிருந்துக் கொள்ளலாம். எதற்கும் ஈடு கொடுக்கக் கூடியவர்கள் இப்பொழுதிருந்தே தயாராக யிருப்பார்களேயானால், தி. மு. கழகம் தகுந்த நேரத்தில்—தகுந்த முறையில் போராட்டத் திட்டத்தைத் தீட்டும்.

போராட்டம் உண்டா இல்லையா, நாங்கள் எப்படிச் செய்தி போடுவது என்று பத்திரிகை நிருபர்கள் கேட்பார்களேயானால் அவர்களுக்கு நான் சொல்கிற பதில், தி. மு. கழகம் போராட்டத்தை வலிய தேடி அலையாது; எந்த போராட்டத்தையும் விடாது என்பதுதான்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு சென்னையில் சூன் 6, 7, 8 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறவிருக்கிறது.

இந்த மூன்று நாட்களில், பொதுக்குழு உறுப்பினர்கள், தங்கள் உள்ளத்தில இருக்கிற எல்லாக் கருத்துக்களையும் மிகத் தெளிவாக என்னிடம் எடுத்துச் சொல்வார்கள்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்களை எடுத்துக்கொண்டு நான் அவர்களுக்குச் சில கருத்துக்களைச் சொல்வேன், என்னுடைய கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு மறுபடியும் திருப்பி எனக்குக் கருத்துக்களைச் சொல்வார்கள். அவைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து தி. மு. கழகம் ஒரு நல்ல முடிவெடுக்கும்.

அப்படி எடுக்கின்ற முடிவு—நாம் ஒரு கடுமையான போராட்டத்தில் ஈடுபடவேண்டிய முடிவாக இருக்குமேயானால், அதற்கு உங்களைத் தயாராக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் கடற்கரைக் கூட்டத்திலேயே கேட்டுக்கொண்டேன். இன்றையத் தினமும் அதைக் கவனப்படுத்துகிறேன்.”

போராட்டத் திட்டம் உடனே தீட்ட வேண்டாமா என்று கேட்டால் நமக்கு அது அவ்வளவு அவசரமில்லை.

பெரியார் தெருத் தெருவாகப் பிள்ளையாரைக் கொண்டுபோய் உடைத்தபோது, நம்முடைய தோழர்களுக்கெல்லாம் கூடக் கொஞ்சம் பயம். பெரியார் இப்படிப்பட்ட புரட்சியான காரியந்தைச் செய்கிறாரே; தி. மு. கழகம் ஒதுங்கி யிருந்தால், ஒழிந்தே போய் விடாதா?” என்றார்கள்.

நான் அப்போது சொன்னேன், அதனாலே முன்னேற்றக் கழகம் ஒழிவதானால் அப்படிப்பட்ட கழகம் வளர்ந்ததே தப்பு என்று!

போராட்டம் எப்பொழுது என்பது நமக்குத் தெரிந்த இலக்கணப்படி — ஆராய்ச்சிப்படி— பொதுக்குழு முறைப்படி-அதை அறிவிக்கும்.

அப்படி அறிவிக்கப்படுகின்ற நேரத்தில் முன்னேற்றக் கழகப்பது இழுக்கு’ என்பது சின்ன வயதிலே படித்த பாடம்; அது பெரியவர்களுக்குக் கூடத் தேவை. அது சின்ன வயதிலே படித்ததுதானே; அது சின்னவர்களுக்கு மட்டும் இருக்கட்டும் என்று வைத்துக்கொள்ள வேண்டாம்; பெரியோர்களுக்குத்தான் அது மிகத் தேவை.

ஆகவே எண்ணித்தான் காரியத்தைத் துணிந்து எடுப்போம்; ஆனால், துணிந்து எடுத்தபிறகு இம்மியளவும் அதிலிருந்து பிறழக் கூடாது என்ற ஒரு கொள்கையோடு நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.

என்னைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. நீங்கள் எந்த அளவுக்குத் தீவிரம் வேண்டுமென்று கருதுகிறீர்களோ அதற்கு ஒரு படி முன்னாலே இருக்கக்கூடியவனே தவிர, ‘அவ்வளவு வேண்டாம்’ என்று இழுக்கிறவனல்ல!

ஆனால், இயக்கத்திலே மிகப் பெரும்பாலோர் எந்த அளவு தயாராயிருக்கின்றனரோ அந்த அளவுக்குத்தான் போராட்டம் அமையும்.

என்னால் 8 மைல் ஓடமுடியும் என்றால், எல்லோரும் அந்த அளவுக்கு ஓடவேண்டும் என்று முடிவு எடுப்பது ஜனநாயகமல்ல. ஆனால், அப்படிச் செய்வது, கட்சி வளர்க்கும் முறையாக இருக்கலாம்.

‘அந்தத் தலைவரா—அவர் அப்படிப்பட்டவராயிற்றே’ என்று பலரும் பேசக்கூடிய அளவுக்குச் சில தலைவர்கள் போராட்டம் நடத்தக்கூடும். அது அவர்களுக்குள்ள முறை!

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு முறை உண்டு. ஆனால் ‘அந்தக் கட்சியில் உள்ள முறை

இரகசிய அவசரக் கூட்டம் நடப்பதாக ஒரு பத்திரிகையில் செய்தி வந்திருந்தது; அதைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டேன்.

நேற்று நான் எங்கிருந்தேன் தெரியுமா? சென்னையிலேயே இல்லை. இரவு 9-மணிக்கு வேலூரில் பேசிக்கொண்டிருந்தேன்!1 மணிக்கு அச்சரப்பாக்கத்தில் பேசிக்கொண்டிருந்தேன்.

என்னுடைய வீட்டில் இதுவரை ஒரு ‘இரகசிய—அவசரக் கூட்டம்’கூட நடந்தது கிடையாது. ‘அவசரம், இரகசியம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது தி. மு. கழகம்.

டெல்லியில் நான் இருந்தபோது தமிழ்நாட்டிலிருந்து எனக்கு வந்த பத்திரிகைகளையெல்லாம் பார்த்தேன். ‘நான் டெல்லியில் இருக்கிறேனா, சென்னையில் இருக்கிறேனா’ என்று எனக்கே புரியவில்லை. ஏனென்றால், நான் அன்றையத்தினம் சென்னைக்குப் புறப்பட்டு வந்து சேருவதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. நான் அன்றையத் தினம்தான் மாநிலங்கள் அவையில் பேச இருந்தேன்.

இப்படி, என்னைப்பற்றி, ‘நான் எங்கிருக்கிறேன் — எங்கே போகிறேன்’ என்பதை நானே தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இந்த நாட்டுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன!

‘ஆடுவதும் பாடுவதும் ஒருசாண் வயிற்றுக்காக’ என்றபடி, அந்

சென்னையில் அண்ணா முழக்கம்

தப் பத்திரிகைகள் நடந்து வருகின்றன!

பூவராகன் திருமணம் செய்து கொள்வதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? உலகைத் திருத்த ஒரு புரட்சிகரமான சட்டம் கொண்டுவந்தார் என்ருல், அதைப் பத்திரிகையில் போடட்டும். பூவராகன் திருமணத்திற்குப் புடவை வாங்கினர் என்பதையும், பந்தல் தோரணங்கள் கட்டப்பட்ட அளவையும் செய்தியாக்கி போடுவதால் நாட்டுக்கு ஆகப் போவது என்ன?

நான் இப்படிச் சொல்லுவதால், அமைச்சரின் திருமணச் செய்தியைப் போடுவதை வேண்டாம் என்று கூறுவதாகக் கொள்ளக்கூடாது; அதற்கு ஒரு வரைமுறை வேண்டாமா?

இத்தகைய பத்திரிகைகளில் என்னுடைய பெயர் வருவதைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன். ஏதேதோ வருகின்ற அந்தப் பத்திரிகையில் அவை பத்திரிகைகள் ஒருமித்த கண்டனக் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்.

பத்திரிகைகளின் ஆதரவு எங்கள் கட்சிக்கு வேண்டும் — என்று கேட்கவில்லை; இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்குத் தரவேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

ஃ

நமது பத்திரிகைகள்!

"நம்மைப்பற்றி நம்முடைய பத்திரிகைகள் அல்லாமல் மற்றப் பத்திரிகைகளில் வருவதை ஏற்றுக்கொள்பவர்கள் நமது கழகத்தவருமல்லர்—எனது தம்பிமாரும் ஆகமாட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்கிறதோ—என்ன செய்யுமோ அது, அதனுடைய பத்திரிகைகளில் வரும். மற்ற பத்திரிகைகளில் வருவதைப் படித்துவிட்டு மனதைக் குழப்பிக்கொண்டால் அதற்கு கழகம் எப்படிப் பொறுப்பாளியாகும்?

பத்திரிகை உலகம்!

பத்திரிகைகளின் ஆதரவை மட்டும் நம்பி நாம் இந்த இயக்கத்தை ஆரம்பிக்கவுமில்லை—நடத்தவுமில்லை.

சில பத்திரிகைகள் நம்மை இழிவுபடுத்தி எழுதுகின்றனவே என்ற கவலையும் நமக்கு இல்லை. அரசாங்கத்துக்கு ஆதரவாக எழுதினுல்தான், அத்தகைய பத்திரிகைகளுக்குக் காகிதமே கிடைக்கும்.

உதாரணமாக 'இந்து' பத்திரிகை என்னை ஆதரித்து எழுதுகிறது என்று வைத்துக்கொள்வோம். அதன்பிறகு அவர்களுக்குக் கிடைத்துவந்த காகிதத்தின் அளவு பாதியாகக் குறையும். அமைச்சர்களிடம் சென்று 'காகிதம் வேண்டும்' என்று கேட்டால், 'அண்ணுதுரையிடம் போய் கேளுங்கள்' என்பார்கள்; இதுதான் நடக்கும். இப்படி நடப்பதால்தான் அவர்கள் தொழில் இலக்கணப்படி பத்திரிகைகளை நடத்துகிருர்கள்.

நம்முடைய பத்திரிகை உலகத்தை நாம் பளபளப்பில்லாமல்—பாரில் பல பகுதிகளிலும் நிருபர்கள் இன்றி சின்னஞ் சிறியதாக ஏற்படுத்திக் கொண்டோம். அதன் துணை கொண்டுதான் இந்த அளவுக்கு வளர்ந்தோம். அதன் பிறகுதான் மற்றப் பத்திரிகைக்காரர்களும் நம் பக்கம் வந்தார்கள்.

—சென்னைக் கூட்டத்தில் அண்ணு

தோழர்களே, விழிப்போடு இருங்கள் வீறு கொண்டெழுங்கள்!

களோடு என்னுடைய பெயரும் வருகிறதே என அருவ( )ப்படைகிறேன்; வேதனைப் ( )கிறேன்."

ஃ

பத்திரிகைகளின் பணி!

இந்தித் திணிப்பு மசோதா வந்த நேரத்தில், தமிழகத்திலுள்ள பத்திரிகைகள் அனைத்தும் கட்சி—கருத்து வேறுபாடுகளையெல்லாம் மறந்து இந்த ஒரு பிரச்சினையைப் பொறுத்தவரை தலையங்கங்களாகவும், செய்திகளாகவும் ஒத்த கருத்தினை நல்ல முறையில் எழுதின.

அவர்களின் இந்த அருந்துணை தொடர்ந்து இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்கு இருக்க வேண்டும்.

அப்படித் தொடர்ந்து தமிழகப் பத்திரிகைகளின் ஒருமித்த ஆதரவு கிடைத்தால், டெல்லியில் உள்ளவர்கள் சற்று யோசிப்பார்கள்! நமக்கும் ஓரளவு வழி பிறக்கும்!

இந்த நேரத்தில் எங்களைக் (கே)வலப்படுத்தி எழுதினுல், (அ)தனுல் எங்களுக்குக் கேவலமில்லை—தமிழர்களுக்கே கேடு விளைவிப்பதாகும். இந்தத் தலைமுறைக்கு மட்டுமல்ல—எதிர்காலத் தலைமுறைக்கே கேடு விளைவிப்பதாகும்.

என்னைப்பற்றி, எதுவேண்டுமானுலும் எழுதுங்கள்—எங்கள் கழகத்தைப்பற்றி எது வேண்டுமானுலும் எழுதுங்கள் — அதனுல் எங்களுக்குக் கவலையில்லை. ஆனுல் இந்தி நுழைவதைப்பற்றி மட்டும் மிகக் கண்டிப்பாக— கட்டுப்பாடாகப் ரூபாய்ச்கு: 24 அணு—என்று யாரோ ஒருவன் வழியிலேயுள்ள சுவரிலே எழுதிவிட்டுப் போனுல், அதைப் பார்த்து என்ன சொல்லுவோம்?—'யார் இந்தப் பைத்தியக்காரன்; இப்படி எழுதியிருக்கிருன்' என்றுதான் சொல்லுவோமே தவிர, 'நாளை முதல் ரூபாய்க்கு 16 அணு இல்லை; 24 அணு' என்ரு ஏற்றுக்கொள்வோம்?

அதைப்போலத்தான், மற்ற பத்திரிகைகளில் முன்னேற்றக் கழகத்தைப்பற்றி வரும் செய்திகளை நாம் கொள்ளவேண்டும்.

நம்முடைய பத்திரிகைகளான 'நம் நாடு', 'முரசொலி', 'திராவிடன்' மற்றும் நமது இயக்க ஏடுகளில் வருவதை நம்புங்கள்; நானே, நடராசனே, மதியழகனே, கோவிந்தசாமியோ, மற்றும் கழகத்தில் பொறுப்பாக உள்ளவர்களோ சொன்னுல் நம்புங்கள்.

நமது கழகத்தைப்பற்றி யாரோ, என்னவோ சொன்னுர்கள் என்று அதை ஏற்றுக்கொள்வீர்களேயானுல், அது என்னையும் நமது கழகத்தையும் அசிங்கப்படுத்தியதாகும்."

ஃ

பத்திரிகை நிருபர்கள்!

1938—இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது தியாகராய நகரில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் நானும் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது; நான் மேடைக்கு எதிரிலே-கூட்டத்தோடு கூட்டமாகத் தரையில் அமர்ந்திருந்தேன். எனக்குப் பக்கத்திலே இரண்டு ஆங்கிலப் பத்திரிகை நிருபர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு என்னை அடை(யா)ளம் தெரியாது. (ஆனுல் இப்போது அவர்களுக்கு என்னைத் தெரியும்; எனக்கும் அவர்களைத் தெரியும்.)

அந்த இருவரில் ஒருவர் மற்ருெருவரைப் பார்த்து, 'எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது; வீட்டுக்குப் போக வேண்டும். நீ கூட்டம் முடியும்வரை இருந்து பார்த்துக் கொண்டுவந்து, என்ன நடந்தது என்று எனக்குச் சொல்லுகிருயா?' என்று கேட்டார்; அதற்கு அவர், 'நானும் அவசரமாகப் போகவேண்டும்' என்று பதிலளித்தார்.

கடைசியாக இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்; 'கூட்டத்தில் பெரும் கலவரம், கூட்டம் குழப்பத்தில் முடிந்தது என்பதாகச் செய்தி போட்டுவிடலாம்' என்றுஅவர்கள் ஆங்கில(த்)தில் பேசிக் கொண்டனர். அருகிலிருந்து அதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

அடுத்து, நான் பேச அழைக்கப்பட்டேன். நான் பேசத் துவங்கியதும், யாரோ ஒருவர் கூட்டத்திலிருந்து எழுந்து, கேள்வி கேட்க ஆரம்பித்தார்; உடனே நான் அவரை நோக்கிச் சொன்னேன்-'நீர் ஏனய்யா வீணுகக் கலகம்விளைவிக்க முயற்சி செய்கிறீர்? நீங்கள் கலவரம் செய்தாலும் செய்யாவி(ட்)டாலும், கூட்டத்தில் கலவரம் நடந்ததாகச் செய்தி போடுவதற்கு இதோ எதிரில் அமர்ந்திருக்கும் நிருபர்கள் முன்பே முடிவு செய்துவிட்டார்கள்; எனவே, நீங்கள் கலகம் செய்யாமலே, கலம் செய்ததாகச் செய்தி வரப்போகிறது; நீர் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை' என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த நிருபர்களையும் சுட்டிக்காட்டினேன்; அப்போதுதான் அந்த நிருபர்களுக்கு நான் யார் என்பதும் புரிந்தது.

அந்தக் காலத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடக்கும் இடத்திலெல்லாம் காங்கிரசுக்காரர்கள் புகுந்து கலாட்டா செய்வது வழக்கம்; 'எப்படியும் கலகம் நடக்கும்' என்று எதிர்பார்த்துத்தான் அந்த நிருபர்கள், முன்கூட்டியே அப்படிச்செய்தி போட முடிவு செய்து, பாதிக் கூட்டத்திலே வீட்டுக்குப் போக முயன்ருர்கள்."

○

தெ. அ. தொ. சங்கம்

5-5-63 ஞாயிறு மாலை 7 மணியளவில் பூங்கா நகர் ஐயா பிள்ளை தெரு, 10-4 எண்ணுள்ள இல்லத்தில் திரு. டபிள்யூ பி. பி. சுந்தரம் அவர்கள் தலைமையில் தென்னக அணிதலத் தொழிலாளர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு கூட்டம் நடைபெற்றது.

அதுபோது கீழ்கண்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காப்பாளர்கள்: என். வி. நடராசன், ('திராவிடன்' ஆசிரியர்) கலைஞர் மு. கருணுநிதி எம்எல்ஏ டயிள்யூ பி. பி. சுந்தரம். தலைவர் திரு. நா. கணபதி பிஎஸ்சிபிஎல் துணைத் தலைவர் திரு. டி. ஆறுமுகம். செயலாளர் திரு. த. சேதுராசன். துணைச் செயலாளர்கள் திரு ச. இராசாங்கம், திரு. வ. சு. வேதகிரி, டி. கே. மூர்த்தி. பொருளாளர் திரு. மா. கே. தாண்டவமூர்த்தி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர்.

திருவண்ணாமலைத் தொகுதி இடைத் தேர்தல் அண்ணா வேண்டுகோள்

விலைவாசியேற்றம்—வரிமேல் வரி—

வேலையில்லாத் திண்டாட்டம்—பொற்கொல்லர் அவதி—

இந்தி மொழி ஆதிக்கம்—

இன்னபிற துன்பங்களை அடுக்கடுக்காய்க் குவித்து, பெரும்பான்மை பலத்தைத் தவறான செயல்களுக்குத் துணையாக்கிக்கொண்டு மனம்போன போக்கில் ஆளுகின்ற காங்கிரசுக் கட்சி, அடுத்து நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல்களில் மக்கள் முகத்தில் விழிக்கச் சிறிதும் நாணம் கொள்ளாது தனக்கே உரிய தேர்தல் விளையாடல்களில் தீவிரமாக இறங்கியுள்ளதை நாடு அறியும்.

தமிழகத்தில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல்களில் காங்கிரசுக் கட்சி முறியடிக்கப்பட வேண்டுமென்ற பொதுவான முயற்சியிலும், குறிப்பாகத் திருவண்ணாமலைத் தொகுதி இடைத்தேர்தலில் தி. மு. கழகமே முன்னின்று ஆளுங்கட்சியைத் தோற்கடிக்க வேண்டும் என்பதிலும் கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

ஆதிக்க ஆசை கொண்டுவிட்ட காங்கிரசுக் கட்சிக்கு எதிர்ப்புக் கூடாரமாக விளங்கிவந்த திருவண்ணாமலைத் தொகுதி, சென்ற பொதுத் தேர்தலில் ஆளுங்கட்சியினரின் சூழ்ச்சித் திறனால் கழகத்தின் கையிலிருந்து மாறியது.

இப்போது மீண்டும் அந்தத் தொகுதி மக்கள் கழகத்திற்கு ஆதரவு அளித்து வெற்றி தேடித்தரும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

ஆட்சியின் அலங்கோலத் தன்மைக்குப் பொதுமக்கள், தங்கள் எதிர்ப்பைக் காட்டவும், அதிருப்தியை வெளிப்படுத்தவும் இடைத் தேர்தல்கள்தான் ஏற்ற வாய்ப்புக்களாகும்.

இந்த வாய்ப்பினைச் சரிவரப் பயன்படுத்தி சனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை, கழகத் தோழர்களுக்கும்—ஆதரவாளர்களுக்கும்—பொதுமக்களுக்கும் உரிய ஒன்றாகும்.

எனவே, கழகத் தோழர்களும், ஒத்துழைப்புத் தரும் எல்லாக் கட்சியினரும் ஒவ்வொரு நாளும் வீடுவீடாகச் சென்று, வாக்காளரைச் சந்தித்து காங்கிரசுக் கட்சியை வீழ்த்த எடுத்துக்கொள்ளும் முயற்சியையும், சலியாத உழைப்பையும், தீவிரத் தொண்டினையும் பொறுத்தே வெற்றி இருக்கிறது.

வெற்றி தேடி அளிக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள தி. மு. கழகத்திற்கும், சிறப்பாக திருவண்ணாமலைத் தொகுதி தி. மு. கழகத் தோழர்களுக்கும் துணைநின்று உதவி அளிக்கும்படி, காங்கிரசு எதேச்சாதிகாரத்தை எதிர்த்து வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம் உடைய அனைவரையும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் செலவுக்கான பண வசதி இல்லாத நிலை கழகத்திற்கு இருப்பது அனைவரும் அறிந்ததே. சனநாயகத்தின் வெற்றியிலே ஆர்வம் கொண்டவர்கள் அனைவரையும், ஆங்காங்குள்ள தி. மு. கழகத் தோழர்களையும்—கழக ஆதரவாளர்களையும், இந்தத் தேர்தலில் கழகம் வெற்றி பெறப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்கு நிதி திரட்டும் பணியில் ஈடுபடும் கழக அமைப்புக்கள் தங்களால் திரட்டப்பட்ட நிதியினையும், தனிப்பட்ட வகையில் தோழர்கள் அளிக்க விரும்பும் நிதியினையும் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனுக்குடன் அனுப்பிவைத்து உதவுமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்! கழக வேட்பாளருக்கு வெற்றி தேடித்தர வாரீர், வாரீர்—என்று, பொதுமக்கள், கழகத் தோழர்கள், மற்றுமுள்ள கட்சியினர் ஆகிய அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

நிதி அனுப்பி வேண்டிய முகவரி ;—

மு. கருணாநிதி, பொருளாளர், தலைமைக் கழகம்,

அறிவகம், சென்னை-13.

அண்ணாதுரை,

பொதுச்செயலாளர், தி.மு.க.

ஆச்சாரியாரின்

ஆணித்தரமான எண்ணம்!

——(0)——



பாராளுமன்றத்தில் நிறைவேறிய ஆட்சி மொழிச் சட்டத்தினால் குழப்பம்தான் ஏற்படும். ஆட்சிமொழியில் எந்த விதமான மாறுதலோ, திருத்தமோ இல்லாமல் இந்தி பேசும் மக்களும், பேசாத மக்களும் அமைதியாக வாழ முடியும்” என்று அவர் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:—

இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் மாற்று மொழியாக நீடிக்கும் என்றும், இந்தி பேசாத மாநில மக்களின் ஒப்புதல் பெறாமல் எந்தவித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்றும் பண்டித நேரு வாக்குறுதி அளித்தார். பண்டித நேருவின் அரசியல் தந்திரமும், ஞானமும் அவரை ஒரு பக்கம் இழுக்கின்றன, அரசியல் மற்றொரு பக்கம் இழுக்கிறது, ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று இந்தி பேசாத நாம் கேட்கும்போது ஒருதலைப்பட்சமாக சலுகை ஏதும் கேட்கவில்லை, ஆட்சி மொழி மசோதா நிறைவேறுவதற்கு முன்பிருந்த நிலைமை நீடிக்க வேண்டுமென்றே நாம் கேட்கிறோம்.

இந்தி பேசும் மக்கள் அவரவர் மாநிலங்களில் இந்தியை ஆட்சி மொழியாக வைத்துக்கொள்ளட்டும், ஆனால் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்குமிடையே நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கும், மத்திய அரசாங்கத்துடன் நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கும், ஆங்கிலம் அவசியமாகும்.

ஆட்சி மொழி மசோதாவினால் உண்டாகியிருக்கும் மாறுதல் இல்லாமலே இந்தி பேசும் மக்களும், இந்தி பேசாத மக்களும் நன்றாக வாழ முடியும். இந்திச்சட்டத்தினால் சிக்கலான குழப்பம்தான் ஏற்படும். ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து எவ்வளவு மன உறுதியுடன் போராட்டம் நடத்தினோமோ அதேபோன்று அதே உறுதியுடன் இந்தித் திணிப்புச் சட்டத்தையும் எதிர்த்து நாம் போராட வேண்டும்.”

— என்று ஆச்சாரியார் அவர்கள் மதுரையில் பேசும்போது கூறினார்.

○

புத்தம்புதிய நடை! களிப்பூட்டும் கருத்தோவியம்!

தோழர். வி. ஆர். மதனகோபால் பி.காம்,

அவர்களின் அருமையான படைப்பு!

அண்டனி

கிளியோபாட்ரா!

“திராவிடன்” 25-5-63 இதழிலிருந்து

தொடங்குகிறது!

○

கிழமைதோறும் சிறந்த விருந்து!

அன்புக்குரிய தோழர்களே சுவைக்க வாரீர்.

நிர்வாகி—திராவிடன்.



ஜமீன்தாரும் இராமாயணப் பண்டிதரும்!

என். வி. என்.

13

இத்தொடர் கட்டுரையின் 13 வது தலைப்பின் உள்ளே நுழைவதற்கு முன் நான் கலைத்துறை ரசிகன் ஆனதைப்பற்றிச் சிறிது விளக்க வேண்டி யிருக்கிறது.

நாடகங்களுக்கும் திரைப்படங்களுக்கும் ஓய்வு கிடைத்த போதெல்லாம் இன்றுகூட செல்லுவது வழக்கம். இதற்குக் காரணம் நான் வசித்துவரும் பெத்துநாயக்கன் பேட்டையில்தான் ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிரமாடிக் கம்பெனி உரிமையாளர் உயர்திரு வெங்கடாசல (முதலியார்) அவர்களின் இல்லமும்! இன்னும் சொல்லப் போனால் ஒரே வீதியில் மிக அடுத்தடுத்துள்ள இல்லங்களில் தான் வசித்து வந்தோம். அப்போது நான் சிறியவன். உயர்திரு. வெங்கடாசல (முதலியார்) அவர்களை எல்லோரும்ஏஜெண்ட் என்றுதான்அழைப்பார்கள். அதாவது ஆலந்தூர் கம்பெனியின் சொந்தக்காரர் என்பதற்கு மரியாதை தந்து அழைக்கும் பெயர் அது !

அவர் இல்லத்திற்கு, அவ்வப்போது அவர் கம்பெனியின் முக்கிய நடிகர்களான மனமோகன அரங்கசாமி (நாயுடு) பி. எஸ். இராமச்சந்திரம் (பிள்ளை) இராவண கோவிந்தசாமி (நாயுடு) வடிவேலு (பிள்ளை) போன்ற அன்றைய பிரபல நடிகர்கள் வருவார்கள். அவ்வீதியிலுள்ள என்னைப் போன்ற இளைஞர்களுக்கு அவர்களை அடிக்கடி பார்ப்பதென்பது பொழுது போக்காக யிருந்தது.

ஆலந்தூர் டிரமாடிக் கம்பெனி, மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, பாவலர் பாய்ஸ் கம்பெனி நாடகங்கள் சென்னையில் நடக்கும் போதெல்லாம் நான் இலவசமாகப் போய்ப் பார்ப்பேன். நாடகங்களைத் தொடர்ந்து பார்க்கும் வழக்கம் இந்த இலவசத்தால்தான் ஏற்பட்டது. இதனால் சமயம் நேரும்போதெல்லாம் என் தந்தையாரிடம் உதைகூட வாங்கியதுண்டு.

குறிப்பாக கொடுமுடி கோகிலம் கே. பி. சுந்தராம்பாள் அம்மையார்—கிட்டப்பா நாடகங்கள் என்றால் எனக்கு உயிர்! ஆறு திங்களுக்கு ஒருமுறை சென்னையில் முகாம் செய்து ஒரு திங்களுக்குத் தொடர்ந்து நாடகம் நடத்துவார்கள். கிழமைக்கு 4 நாடகங்கள் வீதம் ஆக 16 நாடகங்களுக்கும் தவறாது செல்லுவேன். எதிர்பாராத விதமாக எப்போதாவது டிக்கட் கிடைக்க வில்லை என்றால் நாடகக் கொட்டகையான ராயல் தியேட்டரின் பின்புறமுள்ள திடலில் உட்கார்ந்து பாட்டுக்களைக் கேட்டு ரசிப்பேன். அருமைத் தோழர்களே, நான் மட்டும் ஏதோ பைத்தியக்காரத் தனமாக இவ்வாறு தியேட்டர் அருகிலுள்ள திடலில் உட்கார்ந்து ரசித்ததாக எண்ண வேண்டாம். நூற்றுக் கணக்கான ரசிகர்கள்(பெரியவர்கள் உட்பட) கூடியிருந்து கிட்டப்பா — சுந்தராம்பாள் ஆகியோரின் பாடல்களைக் கேட்டு மகிழ்வதுண்டு. மேலும் இதைப்பற்றி விவரிப்பதற்கில்லை. அடுத்து சந்தர்ப்பம் வரும் போது விவரிக்கின்றேன்.

ஆக, இவ்வாறு நாடகக் கலையை ரசிக்கும் பழக்கம் ஏற்பட்ட எனக்கு நாடகத்தில் ஏதாவது ஒரு வேடத்தில் நடிக்க வேண்டும் என்று ஆசையும் ஏற்பட்டது. ஆனால் அந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வழிவகை தெரியவில்லை.

ஒருமுறை எனக்குத் துணிவு ஏற்பட்டது. திருமதி கே. பி. சுந்தராம்பாள் அம்மையாரையே கேட்கலாமென்று எண்ணி அவர் தங்கியிருந்த சென்னை தங்கசாலை வீதியிலுள்ள இல்லத்திற்கு மாலையுடன் சென்றேன். (அன்று மாலை அம்மையாரின் நாடகமும் கூட) வீட்டை நெருங்கியதும் எனக்கு சற்று அச்சம்'ஏற்பட்டது. எனவே அந்த வீட்டு எதிர் வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தேன். சுந்தராம்பாள் அவர்கள் இரண்டு முறை வீட்டுத் தாழ்வாரப் பக்கம் சென்றார்கள். கையில் மாலையுடனிருந்த என்னை முறைத்துப் பார்த்தார்கள். எனக்கு உண்மையிலேயே அச்சம் மேலிட்டது. உடனே அவ்விடத்தை விட்டு நாடகக் கொட்டகைக்கு வந்து சேர்ந்தேன். அந்த மாலையை கே.பி.எஸ். அவர்களுக்கு அணிவிக்குமாறு எனக்கு முன் வரிசையிலிருந்த ஒருவரிடம் கொடுத்தேன். அவர் அந்த மாலையை தாம் அணிவிப்பதைப் போல கூறி சுந்தராம்பாள் கையில் கொடுத்தார். அதை பெற்றுக் கொண்டு அவருக்கு வந்தனம் என்று கூறினார், எனக்கு பெரும் ஏமாற்றமும் எரிச்சலும் உண்டாயிற்று. நாடகத்தை இறுதி வரையிருந்து பார்க்காமல் உடனே எழுந்து வந்துவிட்டேன்.

என்றாலும் நாடகத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் விட்டபாடில்லை. பிறகு எனது நண்பர்களெல்லாம் சேர்ந்து, நாடகத் துறையில் பழக்கப்பட்ட நண்பர் அரங்கநாதன் அவர்களை (தொழிற்சங்கத் தலைவர்) அணுகி நாடக மன்றம் ஒன்று அமைத்தோம். அதில் எனக்கு வேடம் தரப்பட்டது. இரண்டு முறை ஒத்திகைகள் கூட நடந்தன. இதற்குள்ளாக நாடகத்தில் ஈடுபாடு கொண்ட தோழர்கள் தொழில் சம்பந்தமாக வெளியூர் சென்று விட்டதால் அதோடு நாடக மன்றமும் கலைந்தது. என்றாலுங்கூட எனக்கு நாடகத்தில் நடிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் உறுதி குலையவில்லை.

பின்னர் சிலபல ஆண்டுகள் சென்று அறிஞர் அண்ணா அவர்கள் மற்ற தோழர்களுடன் கழகத்திற்கு நிதி திரட்டும் திட்டப்படி நாடெங்கும் நடத்திவந்த சந்திரோதயம் நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன். ஆனால் இந்த வாய்ப்பு அப்படியொன்றும் சாதாரணமாகக் கிடைத்துவிடவில்லை. பல முறை அண்ணா அவர்களைத் தொந்திரவு செய்து அதன் பிறகு பெற்ற வாய்ப்பாகும். நான் திருமதி சுந்தராம்பாளின் ரசிகன் என்பது அண்ணா அவர்களுக்கும் தெரியும்.

சந்திரோதயம் நாடகத்தில் அண்ணா அவர்கள் ஜமீன்தார் வேடம் தாங்கி நடித்திருப்பதை நாடறியும். அந்த ஜமீன்தாரிடம் உதவி பெற்று இராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தும் பண்டிதராக எனக்கு வேடம் தரப்பட்டது. அதற்கான வசனங்களை அண்ணா அவர்கள் எழுதித் தந்தார்கள். அதாவது நான் (ராமாயணப் பண்டிதர்) ஜமீன்தார் (அண்ணா) என்னை எங்கே வந்தீர்கள் என்று கேட்கிறார்.

நான் இராமாயணச் சிறப்பை சில பாடல்களின் வாயிலாக விளக்குகிறேன்.

ஜமீன்தார் (அண்ணா) சில சந்தேகங்களைக் கேட்கிறார்.

பண்டிதர் (நான்) அதற்கு விளக்கம் தருகிறேன்.

அதைக் கேட்ட ஜமீன்தார் எனக்கு வேண்டிய உதவிகளையும் மரியாதையையும் செய்து அனுப்புகிறார்—இதுதான் எனக்குத் தரப்பட்ட பாத்திரமும் பாடமும்!

நாடகம் மதுரை மாநகரில் நமது மதிப்பிற்குரிய தலைவர் மறைந்த சவுந்திரபாண்டியனார் தலைமையில் நடக்கிறது. எனவே எனது நீண்டகால ஆசையை நிறைவேற்ற அதுவும் பாண்டியனார் முன்னிலையில் அண்ணாவுடன் நடிக்கும் நாடகமாகவேஅமைந்துவிட்டது என்றகளிப்பில் எனக்குத் தரப்பட்ட வசனத்தை—இராமாயண செய்யுளையும் மனப்பாடம் செய்து வைத்தேன்.

நாடகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். அதுமட்டுமல்ல, தமிழவேள் பி. டி. ராசன் போன்ற தலைவர்களும் முக்கியஸ்தர்களும் வருகை தந்திருந்தனர்.

நாடகம் ஆரம்பமாயிற்று. நான் நடிக்கவேண்டிய கட்டம் வருவதற்குள் மீண்டும் ஒருமுறை

(அடுத்த பக்கம் பார்க்க)

அண்ணாவுடன் நான் தொடர்ச்சி……

வசனத்தை மனப்பாடம் செய்து தயாரானேன்.

ஜமீன்தார் (அண்ணா) கோட்டும் சூட்டுமாக மிடுக்காய் உட்கார்ந்திருந்தார். அவரது வேலைக்காரனை (போளூர் சுப்ரமண்யம்) அழைத்து நான் (இராமாயணப் பண்டிதர்) வந்திருப்பதாக தெரிவிக்கச் சொன்னேன்.

வேலைக்கார முனியன் போய் சொன்னான்! உள்ளே வரச்சொல் அவரை — ஜமீன்தார் (அண்ணா)

நான் உள்ளே சென்று வணக்கம் அய்யா என்றேன்.

எங்கே வந்தீர்? (அதட்டும் குரலில்)—ஜமீன்தார்.

தங்களைச் சந்திக்க வந்தேன் (பணிவாக)—பண்டிதர்.

எதற்காக ?—ஜமீன்தார்.

இராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்த யிருக்கிறேன். அதற்குத் தங்களின் உதவி வேண்டும்—பாருங்கோ! அந்த இராமபிரானின் பெருமையை இந்தப் பாடலில் என்று பாடலைப் படிக்கப் போனேன் நான் (பண்டிதர்)

ஜமீன்தார் (அண்ணா குறுக்கிட்டு) அய்யா இராமாயண பண்டிதரே, உமக்கு வேண்டியது உதவிதானே, டேய் முனியா இந்தப் பண்டிதருக்கு ஒருபடி அரிசியும் காய்கறியும் கையிலே நாலணாவும் கொடுத்தனுப்பு என்றார்! (கொட்டகை அதிருவது போல சிரிப்பொலி!)

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதாவது எனக்குக் கொடுத்த பாடம் — (வசனம்) போல ஜமீன்தார் பேசவில்லை. என்ன செய்வதென்று புரியவில்லை.

அண்ணாவை மிகக்கோபமாக முறைத்துப் பார்த்தேன், அவர் சிரித்துக்கொண்டே, ‘டேய் சீக்கிரம் கொடுத்தனுப்படா, பண்டிதர் மிகவும் பசியாயிருக்கிறார் போலயிருக்கிறது என்றார். (மீண்டும் சிரிப்பு—தலைவர் பாண்டியன் அவர்கள்கூட விழுந்து விழுந்து சிரித்தார். எனக்கு மிகவும் வெட்கமாய்விட்டது.)

இந்நிலையில் வேலைக்கார முனியன் (போளூர் சுப்ரமணியம்) என்னைப் பார்த்து, ‘இராமாயண பண்டிதர்களுக்கு கோபத்தில் மட்டும் குறைவில்லை. வாங்கய்யா என்னுடன் என்று கூறினார்.

எனக்கு அண்ணா மீதிருந்த கோபத்தைவிட போளூர் சுப்ரமண்யம் (முனியன்) மீது கடுங் கோபமேற்பட்டது. என்ன செய்வது. மேடை…!

அத்துடன் அந்த சீன் முடிந்தது. உள்ளே சென்றேன். அண்ணா அந்த சீனில் நடைபெற்ற சம்பவத்தைச் சொல்லி சிரித்துக் கொண்டிருந்தார்.

எனக்குக் கோபம் தாளமுடியவில்லை. என்ன அண்ணா இது! நீங்களும் உங்கள் நாடகமும், கொடுத்த பாடத்தைப் போல வசனம் பேசாமல் என்னைக் கேலி செய்து விட்டீர்கள், இதுதான் நியாயமா—என்றேன்.

நடராசன், உன்னைக் கேலி செய்யவில்லை இராமாயணப் பண்டிதரை. அதைப் புரிந்துக்கொள்ளவில்லையே நீ! நாடகம் என்றால் சமயோசிதமான ஆனால்—பொருத்தமான வசனத்தை பயன்படுத்துவதான் புதுமையாகும், தெரிகிறதா? என்றார்.

இதற்குள் போளூர் சுப்ரமண்யம் அங்கு வந்தார். உடனே நான், என்ன போளூர் உடம்பு எப்படியிருக்கிறது, இங்கே காட்டுப் பார்க்கலாம் கைவரிசையை என்றேன்.

எசமான், பார்த்தீர்களா இந்தப் பண்டிதரை என்று அண்ணாவைப்பார்த்துக் கூறினார். அனைவரும் ‘கொல்’லென்று சிரித்தார்கள்—நானும் சிரித்துவிட்டேன். அண்ணா அவர்கள் நாடகத்தில் நடிப்பதென்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் நடராசன்’ என்று கூறினார்.

நாடக முடிவில், தலைமை வகித்த பாண்டியனார் அவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கும் வகையில் மேடைக்கு வந்தார். நாடகத்தில் நடித்த அனைவரையும் மேடைக்கு வருமாறு தெரிவித்தார். நான் மிகவும் சங்கடத்துடன் மேடைக்கு மற்றவர்களுடன் சென்றேன். தலைவர் பாண்டியனாரோ “இந்நாடகத்தில் இராமயணப் பண்டிதராக நடித்த நடராசன்……முதல் என்று தமது பேச்சைத் துவக்கினார். மக்களிடையே பலத்த சிரிப்பொலி எழுந்தது — எனக்கோ வியர்த்துக் கொட்டிற்று!

அண்ணா அவர்களுக்கு என்னைப்போன்றவர்களை இவ்வாறு அன்புத் தொல்லை கொடுத்து மகிழ்வதில் அலாதி ஆசை! ஆனால், இந்நிகழ்ச்சிக்குப் பிறகு நாடகத்தில் நடிக்க எனக்குச் சற்று துணிவு ஏற்பட்டது. பின்னர் ‘வழக்கு வாபஸ்’ என்ற நாடகத்தில் கூட நடித்தேன். சமயம் நேரும்போது அதை விளக்குகிறேன்.

(தொடரும்)

இதற்கா இவ்வளவு ஆடம்பரம்?

நாடெங்கும இந்தி எதிர்ப்பு உணர்ச்சி பரவிவருவதைச் காணும் பாராள்வோருக்கு அச்சத்தை உண்டாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

ஜனநாயகப் பண்புடைய அரசாயிருப்பின், அல்லது தங்கள் கொள்கையில் நியாயமிருப்பதாக நம்பும் அரசாயிருப்பின், பிரசாரத்தின் மூலம் தங்கள் வாதங்களை எடுத்துக்கூற முற்படும்.

20—5—63 அன்று சென்னை கடற்கரையில் காங்கிரசு கூட்டம் நடைபெற்றது. முதலமைச்சரிலிருந்து மற்ற முக்கிய காங்கிரஸ் தோழர்கள்வரை மொழிப்பிரச்சினைபற்றி பேசப் போவதாக மூவண்ணந்தீட்டிய சுவரொட்டிகள் முதல் மற்றும் பலவகையான விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன.

கூட்டமும் நடைபெற்றது. மிகமிகக் குறைவான கூட்டம் என்று நடுநிலைப் பத்திரிகைகளே கூறுகின்றன. அந்த எரிச்சலில் மொழிப் பிரச்சினையை விளக்குவதற்கு பதிலாக, தங்கள் சொந்தப் பிரச்சினையை—அதாவது வசைமாரி புரிவதில் தங்களுக்கு எவ்வளவு திறமையுண்டோ அவ்வளவையும் கக்கினார்களாம்!

கடந்த திங்கள் இதே கடற்கரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டம் வரலாற்றுச் சிறப்புடையதாக அமைந்திருந்ததல்லவா! அதற்கு ‘திருஷ்டி பரிகாரம்’ போல இருந்ததாம் இக்கூட்டம்! மந்திரிகள் உதிர்த்த மட்டரகமான வசைமாரிகளைக் கேட்டதும் அங்குக் கூடியிருந்த அந்த மக்களும், இந்த இலட்சணத்திற்கா இவ்வளவு ஆடம்பரமும் அட்டகாசமும் என்று முணுமுணுத்துக்கொண்டே போனார்களாம்!

—நேரில் கண்டவன்

3-ம் பக்கத் தொடர்ச்சி

அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

“இந்தியை ஏற்க விரும்பாத—இந்தி பேசாத மக்களின் தலைகளில் இந்தியைத் திணிக்கிறது ஆட்சிமொழி மசோதா. பிரதமரின் வாக்குறுதி அதில் இடம் பெறவேயில்லை. இந்தி, ஆங்கிலம் இரண்டில் எது ஏக ஆட்சி மொழியாக இருக்கும் யோக்யதை உடையது என்றால் அது ஆங்கிலத்திற்கே உண்டு. இந்தியை ஏற்றால் இந்தி பேசுபவர்களுக்கும் பேசாதவர்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வுகள் மிகுந்துவிடும் என்று நேரு முன்பு கூறியிருந்தார். நிறைவேறியுள்ள மசோதா இந்த ஏற்றத் தாழ்வுகள் நீங்க எதுவும் செய்யவில்லை. இந்தி ஆட்சி மொழியானால் ஏற்றத் தாழ்வுகள் நிரந்தரமாக நீடிக்கும். இந்தி பேசாத மக்களை இந்தியை ஏற்றுக்கொள்ளும்படி நேருவும் சொல்ல முடியாது; இந்தி வெறியர்களும் சொல்ல முடியாது. இந்தி பேசாதவர்கள் இதை ஏற்கமாட்டார்கள். ஆகவே இந்த மொழி காரணமான ஏற்றத்தாழ்கள் ஒழிய வேண்டுமானால் இருக்கும் ஒரே வழி ஆங்கிலம் ஒன்றை மட்டும் ஏக ஆட்சிமொழியாக வைத்துக் கொள்வதுதான் நல்லது”

—இவ்வாறு கூறுகிறது பெங்களூர் பிரமுகர்கள் அறிக்கை. இவர்கள் எல்லாம் எந்தக் கட்சியை வளர்த்துக்கொள்ள இவ்வாறு கூறுகின்றனர்? பதிலளிப்பாரா பக்தவத்சலம்?

மொழிப் பிரச்னை என்பது எப்படியோ ஆகட்டும் என்று இருந்துவிடக் கூடியதா? அந்தந்த மாநில மக்களின் ஜீவ—மரணப் பிரச்னையாயிற்றே அது! இன்று நாம் சும்மா இருந்துவிட்டால், நம் அன்னை மொழி அழிக்கப் பட்டுவிடுமே! எதிர்காலச் சந்ததி என்றென்றும் நம்மைத் தூற்றிக் கொண்டிருக்குமே!

ஆய்ந்து பாராமலோ, அதன் விளைவுகளை டெல்லி மூலவர்களிடம் கூறுமலோ நாம் முடிவெடுத்துவிட வில்லையே! அன்போடு வேண்டினோம். ‘அடுக்குமா ஐயா இந்தப் போக்கு?’ என்று கேட்டோம்.

‘அப்படித்தான் என்கிறது காங்கிரசு ஆட்சி!

இந்தி எதேற்சாதிகார வெறி விரிவதைக் கண்ட பின்புதான் நாம் ஒரு முடிவுக்கு வந்தோம்.

மக்களுக்குள்ள அடிப்படை உரிமைகளை பெற்றுத்தீரவேண்டும். இதைத்தான் நாம் மக்களிடம் சொன்னோம்.

“ஆமாம், எதேச்சாதிகாரம் வளர்ந்து கொண்டே போகிறது. எதெற்கெடுத்தாலும் தடி தூக்குகிறதே தவிர, பெருந்தன்மை இல்லை இந்த ஆட்சியில்” என்று கூறுகின்றனர் மக்கள்.

நாம் நியாயத்தின் தூதுவர்கள்.

“சட்டத்தை வீசி தண்டிப்பேன்” என்கிறார் லால்பகதூர்.

“இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்” என்கிறார் காமராசர்!

சர்க்காரைப் பார்த்து நியாயம் கேட்கிறோம் நாம், நியாயம் கிடைக்கவில்லை. மிரட்டுகிறார்கள்! துப்பாக்கியும், துரைத்தனமும் இருக்கிறது என்ற ஆணவம் அவர்களுக்கு!!

இட்லரும் முசோலினியும் இடறி விழுந்த பாதையில் தலை தெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறது இந்திய அரசு. அதன் வாலைப் பிடித்துக்கொண்டே பின்னால் தொடருகின்றனர் காமராசரும், பக்தவத்சலமும்!

இந்த எதேச்சாதிகார ஆட்சியினரின் ஆணவம் பொடிபட தமிழகத்து மக்களே எழுச்சி கொள்வீர்!

தீங்குள்ள இந்தியை நாமெதிர்ப்போம்; உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை எனச் சூளுரைப்போம்! அதன் வழி நின்று செயலாற்றுவோம்!